7

# வக்கீல்

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

**1955**

2/3-55

**இதழ் 3**

(மே—ஜூன்)

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.


1 JUL 1955

<u>இந்த இதழில்</u>

**புதிய கோர்ட்பீசுக் கட்டணச் சட்டம்**

விலை அணா 4.

(All Rights Reserved.)



...ரெஸாக்...

THE VAKIL - TAMIL LAW MAGAZINE

## "வக்கீல்"

### பொது மக்களுக்கான

### உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L,
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,

[ஆசிரியர்]

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. வெளி நாடு இலங்கை உட்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருடச் சந்தாதார்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்ட புத்தகங்களை வருடச் சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் "வக்கீல்" காரியாலயம்

தபால் பெட்டி 26, கும்பகோணம்

(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## "வக்கீல்" அறிவிப்பு

"வக்கீல்"-1954-பொருள் அட்டவணை:—"வக்கீல்" பத்திரிகையின் 1954-ம் வருடத்திய 12-வது இதழாகிய பொருள் அட்டவணை அச்சிலிருக்கிறது. அடுத்த "வக்கீல்" இதழுடன் வருட சந்தாதார்களுக்கும் இதற்காகத் தனிக் கட்டணம் அனுப்பியவர்களுக்கும் நேராகத் தபால் மூலம் அனுப்பப்படும்.

1955-ல் இதுவரை 3 "வக்கீல்" இதழ்கள்தானே பிரசுரமாகி இருக்கின்றன ஏன்? இப்படிக் கேட்டுச் சில நேயர்கள் கடிதம் எழுதுகின்றனர். இது விஷயத்தைப் பற்றி முன்னதாகவே அறிவிக்காமலிருந்தது எங்கள் தவறு. 1955-ம் வருடமாகிய இவ்வருடத்தில் பொதுமக்கள் அனைவரும் அவசியம் நுட்பமாக அறிந்துகொள்ள வேண்டியதும், அவர்களுடைய சொந்த வாழ்க்கையையும் சொத்து பாத்தியங்களையும் ஓரளவு பாதிக்கக் கூடியவையுமான பல முக்கிய சட்டங்களில், சில வந்து விட்டன; சில வரப் போகின்றன. இந்துக்களுடைய விவாகச் சட்டம், இந்து மைனர் சட்டம் இவை வந்துவிட்டன. இந்து வார்சுரிமைச் சட்டம், நிலச் சீர்திருத்தச் சட்டம் இவை இவ்வருடம் முடிவதற்குள் வந்து விடும். இச்சட்டங்கள் அநேகமாக மக்கள் அனைவரையும் சாதகமாகவோ, பாதகமாகவோ, ஓரளவு பாதிக்கக் கூடியவை. இம் முக்கிய சட்டங்களை அதிகச் செலவில்லாமல் நமது வருட சந்தாதார்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் சில இதழ்கள் ஒதுக்கி யிருக்கிறோம். அவ்விதம் ஒதுக்கி வைத்திருக்கும் இதழ் ஒவ்வொன்றிலும் ஒரே ஒரு முக்கிய சட்டம்தான் விளக்கப்படும். ஆகவே வருட சந்தாதார்களுக்கு ரூ. 3க்கு 12 இதழ்கள் கிடைத்து விடும். வருட சந்தாதார்களாக இல்லாதவர்களுக்கும் இச்சட்டப் புத்தகங்கள் கிடைக்கும்; ஆனால் அதிகவிலையில்.

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.
உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..

ஆடைகளை அழகு பெறச் செய்வது
★ அன்னகிளி ★
சோப்
— தயாரிப்பவர் —
சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்
P. B. No. 22 :: தஞ்சாவூர்.

உ

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில்

## திருப்பணி மகா கும்பாபிஷேகம்

ஆஸ்திகப் பெருமக்களுக்கு ஓர் அரியசந்தர்ப்பம்

உலகெலாமுணர்ந்து ஓதற்கரிய பரம் பொருளை உடையதாயும், சகல கலைகளுக்கும் உறைவிடமாகத் திகழ்வதும், 'பூலோகக் கைலாயம்' என சமயக்குரவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றதுமான தில்லைக் கோயிலில் மிக்க பழுதடைந்த பல பாகங்களை சீர்படுத்தி திருப்பணி வேலை தவங்கி நடைபெற்று வருகிறது. பொதுமக்கள், கிடைத்தற்கரிய மேற்படி தெய்வப்பணியில் பெருவாரியாக பங்கெடுத்துக் கொண்டு நற்பயனை அடைவதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கிறது. மன்மதவாண்டு ஆனித் திங்கள் 23 தேதி (7-7-55) வியாழக்கிழமை சிதம்பரம் ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கு நடைபெறவிருக்கும் சம்புரோக்ஷண மகா கும்பாபிஷேகத்தை மெய்யன்பர்கள் அவசியம் தெரிசித்து பேரானந்தம் எய்தி இன்புறுமாறு கோரப்படுகிறது. தெய்வப் பணிக்கான நன்கொடைகளை "பொக்கிஷதார், ஸ்ரீ சபா நாயகர் கோயில் திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டி, சிதம்பரம்", என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கக் கோருகிறோம்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் கோயில்
திருப்பணி கும்பாபிஷேகக் கமிட்டியார்.

"வக்கீல்"



# பொருள் அடக்கம்

மலர் 7 May - June 1955 இதழ் 3

குறிப்புகள்
"பாண்டுங்" 4
அரசியல் அமைப்புச் சட்டம்.
நான்காவது திருத்தம் நஷ்டஈடு பற்றிய ஷரத்துத் திருத்தம் 5
சர்க்கார் அறிக்கைகள்
முன்சீப் கோர்ட்டுகளுக்கு ரூ. 5000 வரை மதிப்புள்ள தாவாக்களை விசாரிக்க அதிகாரம். ஸ்மால்காஸ் அதிகாரமும் உயர்வு 6
கிராம கோர்ட்டுக்கு ரூ. 100 வரை அதிகாரம் 6
கோர்ட்டு பீசுக் கட்டண—வியாஜ்ய மதிப்பீடு சட்டம் 7
வரிகள்
1955—56 வருடத்திய வருமான வரி விகிதங்கள் 14
புதிய சட்டங்கள்
1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள் 15
1955-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள் 16
கேள்வியும் — பதிலும் 17
உங்கள் தீர்ப்பு என்ன? 21
கூட்டுறவுச் சட்டமும் விதிகளும் 22

187738
சென்னை-600 00
187738

**வக்கீல்**

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 7 மே—ஜூன் 1955 இதழ் 3

## "பாண்டுங்"

கடந்த எப்ரல் மாதத்தில் உலக அரசியல் நிலைமையில் ஒரு பிரும்மாண்டமான அதிர்ச்சி ஏற்பட்டது. உலகத்தின் சரி பாதி ஜனத்தொகையைத் தங்களுக்குள் வைத்திருக்கும் இருபத்தி ஒன்பது தேசங்களின் பிரதம மந்திரிகள் ஒரு ஆசிய நகரத்தில் ஒன்றுகூடினர். பாண்டுங் நகரில் இவர்கள் என்ன பேசினார்கள், என்ன முடிவுக்கு வந்தார்கள் என்பதுகூட அவ்வளவு பெரிய விஷயமல்ல; ஆனால் ஆசிய ஆப்பிரிக மக்களின் உண்மைப் பிரதிநிதிகள், அதுவும் அந்தந்த தேசத்தின் அரசாங்கத்தை நடத்தும் பிரதம மந்திரிகள், தங்கள் தங்களுடைய பரிவாரங்களுடன் ஒரே இடத்தில், அதுவும் ஆசியாவிலிருக்கும் ஒரு நகரில் ஒன்று கூடினர்; கலந்து பேசினர்; ஒருவரை ஒருவர் அன்புடன் ஆலிங்கனம் செய்துகொண்டனர்; ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டனர்; என்பதே மிக மிகப் பெரிய விஷயம். இதைக் கண்ட அமெரிக்காவின் நாடி தளர்ந்துவிட்டது. அணுகுண்டை எப்பொழுதும் ஒரு கையால் தொட்டுக்கொண்டிருக்கும் அமெரிக்கமந்திரி டல்லஸ்துரை இதைக் கண்டு முன்பின் முரணாக உளற ஆரம்பித்துவிட்டார்!

பாண்டுங்கில் கூடியவர்கள் யார் யார்? அங்கே கூடியவர்கள் எல்லோரும் ஒரே நிறமுடையவர்கள் அல்ல; இருந்தாலும் இவர்களில் ஒருவரும் வெள்ளையரல்ல. மற்ற நிறமுடையவர்கள்தான் அங்கே கூடினர். ஏன்? இரண்டு நூற்றாண்டுகளாக மற்ற நிறத்தினரைச் சூறையாடி ஏமாற்றி சீர்குலைக்கச் செய்த வெள்ளையரின் பிடியிலிருந்து நாம் எப்படியோ வெளியே வந்துவிட்டோம் என்பதைக் கொண்டாடுவது போலத்தானே ஆசிய ஆப்பிரிகமக்கள் பாண்டுங் நகரில் கூடினர்! ஒவ்வொரு தேசத்தின் அரசியல் அமைப்பு எவ்விதமாக இருந்தபோதிலும் நாம் சகோதர மனப்பான்மையுடன் நடந்து கொள்ளுவது சாத்தியமே என்ற நமது நேருவின் கொள்கைக்கு அஸ்திவாரக்கல் நாட்டப்பட்டது பாண்டுங் நகரில். கம்யூனிஸ்டு தேசமாகிய சீனாவும் சோஷலிஸத்தை நோக்கித் தளர் நடை போடும் இந்தியாவும், முடியரசைப் பெயரளவில் உடைய ஜப்பானும், ஜனநாயக அரசாங்கங்களை உடைய பர்மா முதலிய குடியரசு நாடுகளும் சர்வாதிகாரம் செலுத்தும் எகிப்து போன்ற சில நாடுகளும், பாண்டுங்கில் கூடிக்கலந்தனர். பாண்டுங்கில் கூடியவர்கள் எவர் கையிலும் அணுகுண்டு இல்லை என்பது உண்மையே. ஆனால் அணுகுண்டை முதலில் பாமரமக்கள் மீது வீசிய அரக்கர்கள், அதை ஆசியமக்கள் மீதுதான் வீசினார்கள் என்பதை ஆசியா இன்னும் மரக்கவில்லை; என்றைக்கும் மரக்காது என்பதையும் எடுத்துக்காட்டியது பாண்டுங். மூன்றாவது உலகமகா யுத்தம் ஆரம்பமாகிவிடுமோ என்று மக்கள் திகிலடைந்திருக்கும் தருவாயில் உலகில் ஓர் அமைதியை நிலவ வைத்தது பாண்டுங்! இதைவிடப் பெரிய உண்மைச் சாதனைகளை எந்த வல்லரசுகளும் இதுவரைக் கூடிச் செய்ததில்லை! இதுபோதும்!

# அரசியல் அமைப்புச் சட்டம். நான்காவது திருத்தம்.
## நஷ்டஈடு பற்றிய ஷரத்து திருத்தம்

அரசியல் அமைப்புச் சட்டத்தின் இந்நான்காவது திருத்தம் பார்லிமெண்ட் சபையால் இயற்றப்பட்டு 27-4-1955-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று சட்டமாயிற்று. அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 31, 31A, 305, 9-வது ஷெடியூல் இந்த ஷரத்துக்கள் இதனால் திருத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கனவே இருந்த ஆர்டிகிள் 31 என்ற ஷரத்துக்கு நமது சுப்ரீம் கோர்ட்டார் செய்த அர்த்தத்தின் விளைவாகவே இத்திருத்தம் ஏற்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 31 (1) என்ற ஷரத்தில் "சட்டபூர்வமாக அல்லாமல் எவருடைய சொத்தும் பறிக்கப்படலாகாது" என்று இருக்கிறது. 31 (2) என்ற ஷரத்தில்—பொதுக் காரியங்களுக்காக ஒருவருடைய சொத்துக்கள் ஒரு சட்டத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்டால், சொத்தை இழந்தவருக்கு நஷ்ட ஈடு கொடுக்க அச்சட்டம் வகை செய்தாலொழிய அச்சட்டமே செல்லாதென்று இருந்தது. இந்த ஷரத்தின்படி — ஒருவருடைய சொத்தின் சுவாதீனதையோ, பாத்தியத்தையோ, சர்க்கார் தங்களுடைய உபயோகத்திற்காக எடுத்துக் கொண்டாலும் சரி, அல்லது ஒருவருடைய சொத்தையோ, சொத்து பாத்தியத்தையோ அல்லது சொத்து சுவாதீனத்தையோ ஒரு சட்டத்தின் மூலம் பறிமுதல்செய்து சர்க்கார் எடுத்துக்கொள்ளாமல் வேறு ஒருவருக்குக் கொடுத்தாலும் சரி— சொத்தை இழந்தவருக்கு நஷ்டஈடு கொடுக்க வகை செய்யும் சட்டங்கள்தான் செல்லுமென்றும், நஷ்டஈடு என்பது பெயரளவில் கொடுக்கப்படுவது அல்ல என்றும், ஒரு சொத்தின் உண்மையான காலக்கிரய மதிப்பேதான் நஷ்டஈடாகுமென்றும் சுப்ரீம் கோர்ட்டார் சில வழக்குகளில் அபிப்பிராயம் அளித்தனர். இப்போது சர்க்கார் கொண்டுவரப் போவதாக உத்தேசித்திருக்கும் நிலச் சீர்திருத்தங்கள் போன்ற பல சட்டங்களில் ஒருவருடைய சொத்து பாத்தியங்களோ, சுவாதீனமோ வேறு நபர்களுக்கு மாற்றப்படும்போது, ஒவ்வொன்றுக்கும் சொத்துக்காரருக்குப் பூரா நஷ்டஈடு கொடுத்தாலொழிய அச்சட்டங்கள் செல்லமாட்டா என்ற நிலைமை ஏற்படுமென்று அஞ்சி இப்போது அரசியல் அமைப்புச் சட்ட வாசகமே நமது பார்லிமெண்ட் சபையால் திருத்தப்பட்டிருக்கிறது. திருத்தப்பட்ட ஆர்டிகிள் 31 (2) (2A) என்ற ஷரத்துக்களின்படி — ஒருவருடைய சொத்தையோ, சொத்தின் சுவாதீனத்தையோ சர்க்காரே எடுத்துக்கொண்டால்தான் — அல்லது சர்க்காருக்குச் சொந்தமாகவோ அல்லது சர்க்காரின் ஆதிக்கத்திலிருக்கும் ஒரு கம்பெனிக்காக எடுத்துக்கொண்டால்தான் — சொத்துக்காரருக்கு எவ்வளவு நஷ்டஈடு கொடுக்க வேண்டுமென்று அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும்; அல்லது எவ்விதம் நஷ்டஈடுத் தொகையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றாவது அச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். ஆனால் அவ்விதச் சட்டங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் நஷ்டஈடுத் தொகைகள் போதுமானதல்ல என்று சொல்ல எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரமில்லை. இதெல்லாம் சர்க்கார் ஒருவருடைய சொத்துக்களை எடுத்துக் கொள்ளுவதைப்பற்றி. ஆனால் ஒருவருடைய சொத்தையோ, சொத்து சுவாதீனத்தையோ சர்க்கார் எடுத்துக் கொள்ளாமல், சொத்தின் பாத்தியமோ, சுவாதீனமோ வேறு ஒருவருக்குப் போகும்படி இயற்றப்படும் சட்டங்களில்- சொத்தை இழந்தவருக்குக் கட்டாயமாக நஷ்ட ஈடு கொடுக்கப்படவேண்டுமென்று ஷரத்து இருந்தாலும், இல்லாவிட்டாலும் குறைவான நஷ்ட ஈடு கொடுக்கும்படி இருந்தாலும் அவ்விதச் சட்டங்கள் செல்லும். இதுதான் நஷ்ட ஈடு பற்றிய அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தம்.

ஆர்டிகிள் 31A என்ற ஷரத்தும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இதன்படி கீழே கண்ட சட்டங்கள் ஆர்டிகிள் 14, 19, 31 இந்த ஷரத்துக்களில் கண்டிருக்கும் ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருந்தாலும் அவை செல்லும். அவையாவன:— (1) ஜமீன் இனாம் பாத்தியங்களை ஒழிக்கும் சட்டங்கள் (2) பொது நன்மைக்காகவோ அல்லது ஒரு சொத்து நன்றாக நிர்வாகம் செய்யப்பட வேண்டுமென்பதற்காகவோ அச்சொத்தின் நிர்வாகத்தைத் தாற்காலிகமாகச் சர்க்காரே ஏற்றுக் கொள்ளுவதற்கான சட்டங்கள் (3) பொது நன்மைக்காகவோ, ஒரு கம்பெனி நன்றாக நிர்வாகம் செய்யப்படவேண்டுமென்பதற்காகவோ, இரண்டு அல்லது அதிகமான

(6-ம் பக்கம் பார்க்க)



# சர்க்கார் அறிக்கைகள்

## முன்சிப் கோர்டுகளுக்கு ரூ. 5000 வரை மதிப்புள்ள தாவாக்களை விசாரிக்க அதிகாரம்- ஸ்மால்காஸ் அதிகாரமும் உயர்வு

1873-ம் வருடத்தியச் சென்னை சிவில் கோர்ட்டுச் சட்டத்தின் செக்ஷன் 12-ன்படி டிஸ்டிரிக்ட் முன்சிப்புக்கள் ரூ. 3000 வரை மதிப்புள்ள தாவாக்களை விசாரிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அச்சட்டத்தின் செக்ஷன் 28-ன்படி ரூ. 300 வரை மதிப்புள்ள ஸ்மால்காஸ் தாவாக்களை டிஸ்டிரிக்ட் முன்சிப்புகளும் ரூ. 1000 வரை மதிப்புள்ள ஸ்மால் காஸ் தாவாக்களை சப்ஜட்ஜ் அல்லது ஜில்லா ஜட்ஜுகளும் விசாரிக்கும்படி அவர்களுக்கு ஹைகோர்ட்டார் அதிகாரமளிக்கலாமென்றும் இருந்தது.

1951-ம் வருடத்திய 16-வது சென்னைச் சட்டத்தால் இந்த ஷரத்துக்கள் திருத்தப்பட்டன. அதாவது டிஸ்டிரிக்ட் முன்சிப்புக்கள் ரூ. 5000 வரை மதிப்புள்ள தாவாக்களை விசாரிக்கலாமென்றும் டிஸ்டிரிக்ட் முன்சிப்புகளுக்கு 500 வரை ஸ்மால்காஸ் அதிகாரமும் சப்ஜட்ஜ் ஜில்லா ஜட்ஜுகளுக்கு ரூ. 2000 வரை ஸ்மால்காஸ் அதிகாரம் அளிக்கப்படலாமென்றும் சிவில் கோர்ட்டுச் சட்டம் திருத்தப்பட்டது. ஆனால், அத்திருத்தச் சட்டமானது சென்னை ராஜ்ய சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல்தான் அமுலுக்கு வருமென்று அதிலேயே ஒரு ஷரத்து இருந்தது. அதை அனுசரித்து சென்னை சர்க்கார் அத்திருத்தச் சட்டமானது 19-5-1955 முதல் அமுலுக்கு வருமென்று உத்தரவிட்டிருக்கின்றனர். அதாவது 19-5-1955 தேதி முதல் ரூ. 5000 வரை மதிப்புள்ள அசல் வியாஜ்யங்களை டிஸ்டிரிக்ட் முன்சிப் கோர்ட்டில் தாகல் செய்யவேண்டும். ஸ்மால்காஸ் வியாஜ்யங்கள் சம்பந்தப்பட்ட வரையில் திருத்தச்சட்டத்தில் கண்ட அளவுக்கு அந்தந்தக் கோர்ட்டுகளுக்கு அதிகார வரம்பை உயர்த்தும் அதிகாரம் ஹைகோர்ட்டாரிடம் இருக்கிறது.

## கிராமக் கோர்ட்டுக்கு ரூ. 100 வரை அதிகாரம்

மேற்கண்ட 1951-ம் வருடத்திய திருத்தச் சட்டப்படி - பஞ்சாயத்துச்சட்டப்படி அமைக்கப்படாத கிராம கோர்ட்டுகளும் ரூ. 100 வரை மதிப்புள்ள வியாஜ்யங்களை விசாரிக்கலாமென்று சர்க்கார் அதிகாரமளிக்கலாம்.

1950-ம் வருடத்திய பஞ்சாயத்துச் சட்டப்படி அமைக்கப்பட்ட பஞ்சாயத்துக் கோர்ட்டுகளுக்கு ரூ. 100 வரை உள்ள தாவாக்களை விசாரிக்க அச்சட்டத்திலேயே செக்ஷன் 132-ல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

---

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பெனிகளை ஒன்று சேர்க்கும் சட்டங்கள் கம்பெனிகளின் மானேஜிங் ஏஜண்டுகள், காரியதரிசிகள், பொக்கிஷதார்கள், மானேஜிங் டைரெக்டர்கள், டைரெக்டர்கள், அல்லது மானேஜர்களின் எவ்வித உரிமைகளையும் சரி, 'ஷேர்ஹோல்டர்' என்ற கம்பெனி பங்குதார்களின் "வோட்" போடும் உரிமைகளையும் சரி ரத்து செய்து அல்லது மாற்றும் சட்டங்கள் (5) சுரங்களிலிருந்து உலோகங்கள் அல்லது எண்ணெய் எடுப்பதுபற்றிய ஒப்பந்தங்களை ரத்து செய்யும் அல்லது மாற்றும் சட்டங்கள். மேலே கண்ட ஐந்துவகைச் சட்டங்கள் சில ஜீவாதார உரிமைகளுக்கு முரணாக இருந்தாலும் அவை செல்லும் — என்று ஒரு திருத்தம்.

ஆர்டிகிள் 305 என்ற ஷரத்தும் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதிலும், வியாபாரம் வாணிபம், போக்குவரத்து இவை சுயேச்சையாக இருக்கவேண்டுமென்று இருந்தாலும், அரசாங்கமே குறிப்பிட்ட தொழில் அல்லது வர்த்தகத்தைப் போட்டியில்லாமல் செய்வதற்கான சட்டங்கள் செல்லுமென ஆர்டிகிள் 305 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

# கோர்ட்டு பீசுக் கட்டண—வியாஜ்ய மதிப்பீடுச் சட்டம் (1955)

[ 19-5-1955 முதல் அமுலுக்குவந்து விட்டது ]

## முகவுரை

1955-ம் வருடத்திய 14-வது சென்னைச் சட்டம். Madras Court Fees and Suit valuation Act 1955. சென்னைச் சட்ட மன்றத்தால் இயற்றப்பட்ட இச்சட்டமானது 13-5-1955-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று 16-5-1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டம் சென்னை ராஜ்யம் பூராவுக்கும் உண்டு. சென்னைச் சர்க்காரால் கெஜட் அறிக்கை மூலம் குறிப்பிடப்பட்ட தேதியாகிய 19-5-55 முதல் இது அமுலுக்கு வந்துவிட்டது. கோர்ட்டில் போடப்படும் வியாஜ்யங்களை மதிப்பிடுவது பற்றிய 1887-ம் வருடத்திய 7-வது மத்தியச் சட்டமும்; கோர்ட் பீசுக் கட்டணங்களைப்பற்றிய 1870-ம் வருடத்திய 7-வது மத்தியச் சட்டமும், சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில் இச்சட்டத்தால் ரத்து செய்யப்பட்டு இவ்விரண்டு விஷயங்களைப் பற்றியும் இப்பொழுது ஒரே சட்டமாக இயற்றப்பட்டிருக்கிறது. முன்பு இருந்த சட்டங்களுக்கும் இப்புதுச் சட்டத்திற்கும் பல முக்கிய விஷயங்களில் மாறுதல்கள் இருக்கின்றன. இச்சட்ட ஷரத்துக்களால இப்போது மாறுதல் செய்யப்பட்டிருக்கும் மிக முக்கியமான அம்சங்கள் மட்டில் கீழே பெரும்படியாக விளக்கப்பட்டிருக்கின்றன.

### ஏற்கனவே போடப்பட்ட தாவாக்களுக்கும், நடவடிக்கைகளுக்கும் இனி அவைமீது ஏற்படக்கூடிய அப்பீல் ரிவிஷன் முதலிய நடவடிக்கைகளுக்கும்—பழைய சட்டமே

இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு தாகல் செய்யப்பட்ட தாவாக்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் சரி; அவைமீது அப்பீல், ரிவிஷன் அல்லது வேறு நடவடிக்கைகள் சம்பந்தப்பட்ட வரையில் அவை இச்சட்டத்திற்கு முன்பே தாகல் செய்யப்பட்டாலும், சரி இச்சட்டத்திற்குப் பிறகு தாகல் செய்யப்பட்டாலும் சரி—அவைகளுக்குப் பழைய கோர்ட் பீசுச் சட்டம் வியாஜ்ய மதிப்பீடுச் சட்டம் இவைகளின்படியே தான் ஸ்டாம்புக்கட்டணமும் வியாஜ்ய மதிப்பீடும் நிர்ணயிக்கப்படும் (செக்ஷன் 87 (2))

### "கோர்ட்"

கோர்ட்டுகளில் தாகல் செய்யப்படும் பிராது, ஸ்டேட்மெண்ட், மனு, தஸ்தவேஜுகள் முதலியவற்றிற்கு இச்சட்டத்தில் கண்டபடி கட்டணம் கட்டினால்தான் அவை கோர்ட்டுகளால் ஏற்றுக் கொள்ளப்படும். "கோர்ட்" என்பதில் சிவில், ரிவின்யூ, கிரிமினல் கோர்ட்டுகளும், விசேஷச் சட்டங்களின்படி ஏற்படுத்தப்பட்டு, கட்சிக்காரர்களின் உரிமைகளை பாதிக்கக்கூடிய பிரச்னைகளை முடிவு செய்வதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ள 'டிரிபுனல்கள்' என்ற நியாய சபைகளும் சேர்ந்தவையாகும். (செக்ஷன் 3 (ii))

### "மார்செட்" மதிப்பு—நிலங்களுக்கு கிஸ்தியைப்போல 30 மடங்கு

இச்சட்டத்தில் பல இடங்களில் ஒரு சொத்தின் "மார்கெட்" மதிப்பு (Market value) அல்லது காலக்கிரய மதிப்பின் பேரில் கோர்ட் பீசு ஸ்டாம்பு கட்டவேண்டுமென்று சொல்லப்படுகின்றது. 'மார்கெட்' மதிப்பு என்பது தாவா தாக்கல் செய்யப்படும் தேதியில் அச்சொத்தின் விலை என்னவோ அதாகும். ஆனால் நிலங்கள் சம்பந்தப்பட்ட வரையில் சில வகைத் தாவாக்களில் 'மார்க்கெட்' மதிப்பு என்பது—நிலத்தின் ரிவின்யூ கிஸ்தி அல்லது நிலவரி (assessment) எவ்வளவோ அதைப்போல 30 மடங்காகும். இது ரயத்துவாரி நிலங்களுக்கு. இது ஒரு பூரா சர்வே நம்பராக இல்லாமல் ஒரு பாகமாக இருந்தால் அப்பாகத்திற்கு வீதாசாரமான கிஸ்தியைப் போல 30 மடங்கே அதன் மார்கெட் மதிப்பாகும். ஜமீன் அல்லது இனாம் நிலங்கள் சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தால் ஜமீன் இனாம் ஒழிப்புச் சட்டப்படி நிலத்திற்குக் கொடுக்கப்படவேண்டிய லாண்டு ரிவின்யூவைப்போல 30 மடங்குதான் சொத்தின் மார்கெட் மதிப்பாகும். வாரக் குறைப்பு மட்டில் ஏற்பட்ட இனாம் கிராமங்களிலுள்ள நிலங்களுக்கு வாரத்தைப்போல 30 மடங்கே நிலத்தின் மார்கெட் மதிப்பாகும். மற்ற இனாம் நிலங்களுக்கு மேல்வாரத்தைப்போல 30 மடங்கே சொத்தின் மார்கெட் மதிப்பாகும்,

மைனர் இனும் நிலங்களுக்கு 'பி' ரிஜிஸ்டரில் கண்ட கிஸ்தியைப்போல 30 மடங்குதான் அதன் மார்கெட் மதிப்பாகும். வீடு கட்டக் கூடிய மனைக்கட்டுகளுக்கு காலக் கிரயமே தான் மார்கெட் மதிப்பாகும். நிலங்கள் சம்பந்தமான 'டிக்ளரேஷன்' தாவாக்கள், இன்ஜங்ஷன் தாவாக்கள், சொத்து சுவாதீனம் கேட்கும் தாவாக்கள், பாகவியாஜ்யங்கள், சர்வேச்சட்டம் சம்பந்தமான தாவாக்கள், இவைகளில்தான் மேற்கண்டபடி நிலங்களுக்கு மார்கெட் மதிப்பு கணக்குச் செய்யப்படலாம். (செக்ஷன் 7.)

## ஒரு பிராதை எந்தக் கோர்ட்டில் தாகல் செய்யவேண்டுமென்பதற்காக எப்படி மதிப்பீடு செய்வது.

ஒரு பிருது அல்லது தாவா போடும்போது இரண்டு பிரச்னைகள் எற்படுகின்றன. அத்தாவாவை எந்தக் கோட்டில் தாகல் செய்யவேண்டுமென்பது ஒன்று. அத்தாவாவுக்குக் கோர்ட் பீசுக் கட்டணம் எவ்வளவு கட்டவேண்டுமென்பது மற்றொன்று. ஒரு தாவாவுக்கு கோர்ட் பீசுக் கட்டணம் கட்டுவதற்காக அதன் மதிப்பை எப்படிக் கணக்குச் செய்யவேண்டுமென்று இச்சட்டத்தில் பல ஷரத்துக்கள் இருக்கின்றன. அதே மதிப்பைக் கொண்டுதான் அத்தாவாவை எந்தக் கோர்ட்டில் தாகல் செய்யவேண்டுமென்பதையும் நிர்ணயம் செய்யவேண்டும். இதற்கு 'ஜுரிஸ்டிக்ஷன்' மதிப்பு என்று பெயர். அதாவது, இது விஷயமாக இச்சட்டத்திலோ வேறு சட்டங்களிலோ குறிப்பிட்ட விதி இருந்தாலொழிய — கோர்ட் பீசுக்கட்டணத்திற்கும் 'ஜுரிஸ்டிக்ஷனு'க்கும் ஒரே மதிப்புத்தான். ஆனால் சில தாவாக்களில் மதிப்பின் பேரில் கோர்ட் பீசுக் கட்டணம் கட்டவேண்டியதில்லை. குறிப்பிட்ட கட்டணம் கட்டினால் போதுமென்று இருக்கிறது. அவ்வித தாவாக்களில் சம்பந்தப்பட்ட சொத்தின் மார்கெட் மதிப்பு என்னவோ அதுதான் ஜுரிஸ்டிக்ஷன் பொருமானமாகும். தாவா சொத்துக்கு மார்கெட் மதிப்பு ஒன்றுமில்லாவிட்டால்வாதி தம் இஷ்டப்படி ஜுரிஸ்டிக்ஷன் மதிப்புப் போடலாம் (செக்ஷன் 53.)

## ஸ்மால்காஸ், அசல் இரண்டு வகை தாவாக்களுக்கும் ஒரே விதக் கட்டணம்.

முன்பு ஸ்மால்காஸ் பிராதுகளுக்கும் அசல் வியாஜ்யங்களுக்கும் கோர்ட்பீசுக் கட்டணத்தில் வித்தியாசம் இருந்தது. இப்போது அவ்வித்தியாசம் இல்லை. இப்புதுச் சட்டப்படி எவ்வகை தாவாக்களுக்கும், ரூ. 100-க்கு ரூ. 7-8-0 வீதம் கோர்ட்பீசு ஸ்டாம்பு கட்டவேண்டும். அதாவது தாவாத் தொகையோ சொத்து மதிப்போ ரூ. 5-க்கு அதிகப்படாதிருந்தால் அதற்கு கோர்ட்பீசு அணா 6-ம்; அதற்குமேல் ரூ. 100 வரை ஒவ்வொரு ரூ. 5-க்கும் அதன் பாகத்திற்கும் அணா 6 வீதமும்; ரூ. 100-க்கு மேற்பட்ட தொகைக்கு அது எவ்வளவு அதிகமாக இருந்தாலும் ஒவ்வொரு ரூ. 10-க்கும் அதன் பாகத்திற்கும் அணா 12 வீதமும் கோர்ட்பீசு ஸ்டாம்பு கணக்கு செய்து கட்டவேண்டும். ஒரு தாவாவில் பிரதிவாதியானவர் தமக்கு வாதியிடமிருந்து கிடைக்கவேண்டிய தொகையை வாதி கேட்கும் தொகையில் ஈடுசெய்து கொள்ளவேண்டுமென்றோ, அல்லது தமக்கு வாதியிடமிருந்து தொகை கிடைக்கவேண்டியிருக்கிறதென்றோ கேட்டிருந்தால் அவ்வித ஸ்டேட்மெண்டுகளுக்கும் பிரதிவாதி கேட்கும் தொகைகளுக்கு பிராதைப்போலவே கோர்ட் பீசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும். அப்பீல்களுக்கும் இதே விகிதப்படித்தான் ஸ்டாம்பு கட்டணம் கட்டவேண்டும். (ஷிடியூல் 1 ஆர்டிகிள் 1.)

## மற்ற கட்டண மாறுதல்கள். நஷ்ட ஈடு கேட்கும் மனுக்களுக்கு மதிப்பின் பேரில் ஸ்டாம்பு

காரணமில்லாமல் ஒருவரை இன்சால்வெண்டாகச் செய்ய மனுக் கொடுத்தால், மனுக் கொடுத்தவர்மீது நஷ்ட ஈடு வேண்டுமென்று இன்சால்வென்சிச் சட்டத்தின் செக்ஷன் 26-ன்படியோ; அல்லது காரணமில்லாமல் ஒருவர்மீது அரெஸ்டு, அல்லது ஜப்தி அல்லது தாற்காலிக இன்ஜங்ஷன் உத்தரவு வாங்கியதற்காக சிவில் வழக்கு முறைச்சட்டம் செக்ஷன் 95-ன்படியோ நஷ்ட ஈடு கேட்கும் மனுக்களுக்கு அத்தொகைக்குத் தாவா செய்தால் எவ்வளவு கட்டணமோ அதில் பாதி கட்டவேண்டும், அவைகளிலிருந்து எற்படும் அப்பீல்களுக்கு தாவாவைப்போல முழு ஸ்டாம்பு கட்டவேண்டும். (ஷிடியூல் 1 ஆர்டிகிள் 2.)

## இன்சால்வெண்டு ஏற்படுத்திய பராதீனங்களை ரத்துசெய்ய இன்சால்வென்சிச் சட்டத்தின் செக்ஷன் 53 அல்லது 54-ன்படி போடப்படும் மனுக்களுக்கும் மதிப்பின் பேரில் ஸ்டாம்பு

முன்பு இம்மனுக்களுக்கு ஸ்டாம்பு அணா 12 தான். இப்போது மனுவில் கண்ட சொத்

தின் மார்கெட் மதிப்பில் சரி பாதி மதிப்புக்கு அசல் தாவா செய்தால் எப்படியோ அவ்வளவு ஸ்டாம்பு கட்டவேண்டும், ஆனல் சொத்து மதிப்பு எவ்வளவு அதிகமாக இருந்தாலும் ரூ. 500-க்குமேல் ஸ்டாம்பு கட்டவேண்டிய தில்லை இது சம்பந்தமான அப்பீல் மிமோக் களுக்கும் அதே விதம் ஸ்டாம்பு கட்டவேண் டும். (ஷிடியூல் 1. ஆர்டிகிள் 3.)

### வார்சுச் சட்ட உத்தரவுகளின் பேரில் அப்பீல்

1925-ம் வருடத்திய இந்திய வார்சுச் சட் டப்படி வார்சு சர்டிபிகேட் மனு முதலிய நட வடிக்கைகளில் ஏற்படும் உத்தரவுகளின் பேரில் அப்பீல் செய்ய, சம்பந்தப்பட்ட சொத்துக்கு அசல் தாவா செய்தால் எவ்வளவு ஸ்டாம்பு கட்டவேண்டுமோ அதில் பாதி ஸ்டாம்பு கட்டவேண்டும். (ஷிடியூல் 1. ஆர்டிகிள் 4.)

### வகாலத்து

ஹைகோர்ட் தவிர மற்ற கோர்ட்டுகளி லும், கலெக்டர் மாஜிஸ்ட்ரேட் அல்லது வேறு நிர்வாக அதிகாரிகளிடத்திலும் தாகல் செய்யும் வகாலத்துக்களுக்கு ஸ்டாம்பு ரூ. 1-8-0 ரிவின்யூபோர்டில் தாகல் செய்யப் படும் வகாலத்துக்கு ரூ. 2-0-0 ஹைகோர்ட் அல்லது சர்க்காரிடம் தாகல் செய்யப்படும் வகாலத்துக்கு ஸ்டாம்பு ரூ. 3-0-0.

### ஒ. பி. (O. P.) அல்லது ஆசல் மனுக்கள்

வேறு தினுசாக ஸ்டாம்புக் கட்டணம் விதிக்கப்பட்டிருந்தாலொழிய ஜில்லா முன்சீப் கோர்ட்டில் கிராம கோர்ட் சட்டப்படி போடப்படும் மனுவுக்கு ஸ்டாம்பு ரூ. 1-0-0 மற்ற அசல் மனுக்கள் ஜில்லா முன்சீப் கோர்ட்டில் போடப்பட்டால் ஸ்டாம்பு ரூ. 5 சிடிசிவில் கோர்ட், சப்கோர்ட் அல்லது ஜில் லாக் கோர்ட்டில் போடப்பட்டால் ரூ, 10; ஹைகோர்ட்டில், போடப்பட்டால் ரூ. 20 ஸ்டாம்பு கட்டவேண்டும். (ஷிடியூல் 2-11.)

### நகல் மனு - டிக்ரி காபி முதலியவை

| | |
|---|---|
| நகல் மனுவுக்கு ஸ்டாம்பு | ரூ. 0-4-0 |
| ஜட்ஜ்மெண்ட் காபிகளுக்கு (ரூ. 50 அல்லது அதற்குட்பட்டது) | 0-8-0 |
| ஷை (ரூ. 50-க்குமேல்) | 1-0-0 |
| ஹைகோர்ட் ஜட்ஜ்மெண்ட் காபி | 2-0-0 |
| கிரிமினல் கோர்ட் ஜட்ஜ்மெண்ட் காபி | 0-8-0 |
| டிக்ரி நகல் (ரூ. 50 அல்லது அதற் குட்பட்டது) | 0-12-0 |
| ஷை (ரூ. 50-க்கு மேற்பட்டது) | 1-8-0 |
| ஹைகோர்ட் டிக்ரி நகல் | 3-0-0 |
| மற்ற கோர்ட் நடவடிக்கை நகல் களுக்கு (இது முன்பு வார்த்தை களின் எண்ணிக்கையின் பேரில் இருந்தது. இப்போது ஒவ்வொரு தஸ்தவேஜு நகலுக்கும் அணு 12-தான் ஸ்டாம்பு.) ஷிடியூல் 2 ஆர்டிகிள் 9. | 0-12-0 |

குறிப்பு:—மற்ற கட்டண விபரங்கள் "வக்கீல்" பிந்திய இதழ்களில் கொடுக்கப்படும்.

### பிராது முதலியவற்றைக் காலதாமத மாகத் தாகல் செய்த காரணத்தால் அவை நிராகரிக்கப்பட்டால், ஸ்டாம்பு வாபசு கொடுக்கப்படும்

பிராது அல்லது அப்பீல் மிமோராண்டத்தை கோர்ட்டால் 'வாபஸ்' செய்யப்பட்டு, அதைத் திருப்பி தாகல் செய்ய (Re-Presentation) க் கோர்ட்டால் குறிப்பிடப்பட்டிருக்கும் கெடு வுக்குள் திருப்பி தாகல் செய்யப்படவில்லை என்ற காரணத்தினுல் அத்தாவாவை அல்லது அப்பீல் மிமோவைக் கோர்ட்டார் நிராகரித்து விட்டாலும் (Rejected) சரி; அல்லது ஒரு தாவாவுக்கோ, அப்பீல் மிமோவுக்கோ செலுத் தப்பட வேண்டிய கோர்ட் பீசுக் கட்டணம் குறைவாகக் கட்டப்பட்டிருந்து, பாக்கிக் கட்டணத்தைக் கட்டும்படி கோர்ட்டார் ஒரு கெடுக் கொடுத்திருந்தும் அதற்குள் பாக்கிக் கோர்ட் பீசைக் கட்டாமலிருந்தோ, அல்லது கெடுக் கடந்து தாமதமாகக் கட்டியதை கோர்ட்டார் மன்னிக்காமலோ, பிராதோ அல்லது அப்பீல் மிமோவோ நிராகரிக் கப்பட்டாலும் சரி; வாதியாலோ, அப்பீல் வாதியாலோ கட்டப்பட்ட கோர்ட் பீசுத் தொகை அவருக்குத் திருப்பி (ரீபண்டு)க் கொடுக்கப்படும். ஆனல் அப்பீல் செய்து கொள்ளவேண்டிய காலாவதி கெடுக் கடந்த பிறகு ஒரு அப்பீல் தாகல் செய்யப் பட்ட காரணத்தினுல் அவ்வப்பீல் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்பட்டால், அப் பீல் வாதி கட்டியிருக்கும் கோர்ட் பீசில் சரி பாதிதான் அவருக்கு வாபசு (ரீபண்டு) செய் யப்படும். (செக்ஷன் 66)

அப்பீலில் தாவா ரிமாண்டு செய்யப்படும் போதும், கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பு மாற்றப் படும் போதும் சில சந்தர்ப்பங்களில் கோர்ட் பீசு 'ரீபண்டு' செய்யப்படும். (செக்ஷன் 67, 68.)

## ஒரு வழக்கில் விசாரணை ஆரம்பமாகும் முன்பே வழக்குத் தீர்ந்து விட்டதாகத் தள்ளப்பட்டால், பாதி கோர்ட்பீசுக் கட்டணம் வாப்ஸ் செய்யப்படும்

எந்த தாவாவிலும், அத்தாவாவின் தராதரத்தைப்பற்றிய விசாரணை ஆரம்பமாகுமுன், கோர்ட்டுக்கு வெளியே கட்சிக்காரர்கள் ஒரு ஏற்பாட்டுக்கு வந்துவிட்ட காரணமாக அத்தாவா தள்ளப்பட்டால், (Settled out of court) சரி பாதிக் கட்டணம் 'ரீபண்டு' கொடுக்கப்படும். அதாவது எந்த எந்தக் கட்சிக்காரரால் அத்தாவா சம்பந்தமாக எவ்விதக் கட்டணங்கள் கட்டப்பட்டிருந்த போதிலும், அவரவரால் கட்டப்பட்ட கோர்ட் பீசுக் கட்டணங்களில் சரி பாதியை அவரவருக்குத் திருப்பிக் கொடுக்கப்படும். தாவாவின் தராதரத்தைப்பற்றி (Merits of the claim) கோர்ட்டாரால் சாட்சியம் பதிவுசெய்து கொள்ளுவதற்கு முன்பே மேற்கண்டபடி தாவா தள்ளப்பட்டால்தான் பாதி கோர்ட் பீசு 'ரீபண்டு' கிடைக்கும். தாவாவின் அமைப்பைப்பற்றியோ, வியாஜ்ய மூலத்திற்கு ஏற்ற கட்சிக்காரர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா என்பது பற்றியோ, அத்தாவாவை ஏற்றுக்கொள்ள அந்தக் கோர்ட்டுக்கு அதிகாரமிருக்கிறதா என்பதைப்பற்றியோ, தாவாவுக்குச் சரியான கோர்ட் பீசுக் கட்டணம் கட்டப்பட்டிருக்கிறதா என்பதைப்பற்றியோ, ஏதாவது விசாரணை நடந்தாலும் பாதகமில்லை—அவ்விசாரணைகள் வழக்கின் தராதரத்தைப் பற்றிய விசாரணையாகக் கருதப்படமாட்டாது. ஆனால் இத்தாவாவில் கண்ட விஷயம் இதற்கு முன்பே இதே கட்சிக்காரர்களிடையே ஏற்பட்ட ஒரு முந்திய வழக்கில் முடிவுபெற்று விட்டதால் அவ்விஷயத்தைப் பற்றி மறுபடியும் விசாரிக்கக் கூடாதென்ற 'ரீஸ்ஜுடிகாடா' (Resjudicata) என்ற கட்சியும்; காலாவதி சம்பந்தமான கட்சியும் அத்தாவாவின் தராதரத்தைப்பற்றிய விஷயங்களேயாகும். (செக்ஷன் 69.)

## தவறாகவோ, கவனக் குறைவாகவோ கட்டப்பட்டு விட்ட கோர்ட் பீசும் வாப்ஸ் கொடுக்கப்படும்

தவறாகவோ, அல்லது கவனக் குறைவு காரணமாகவோ செலுத்தப்பட்ட கட்டணங்களைத் திருப்பிக் கொடுத்து விடும்படி உத்தரவு பிறப்பிக்கப்படும். (செக்ஷன் 70)

## பாக டிக்ரிகளில் ரீபண்டு

பாக வியாஜ்யங்களில் முடிவான தீர்ப்பு (Final Decree) ஏற்படும்போது அத்தீர்ப்பானது கட்சிக்காரர்களால் கொடுக்கப்படும் 'ஜெனரல் ஸ்டாம்பு' என்ற பத்திர ஸ்டாம்பில் எழுதப்படும். அப்படி டிக்ரி எழுதப்படும்போது, அக்கட்சிக்காரர்கள் செலுத்தியிருக்கும் அதே மதிப்புள்ள கோர்ட் பீசுச் கட்டணம் அவர்களுக்கு வாப்ஸ் (Refund) கொடுக்கப்படும். (செக்ஷன் 71.)

## சிலவகை வியாஜ்யங்களுக்குக் கோர்ட்பீசுக் கட்டணம் கணக்கிடப் படவேண்டிய விதம்.

### பண வியாஜ்யங்கள் (செக்ஷன் 22)

பணம் கிடைக்கவேண்டுமென்றோ, நஷ்டஈடு அல்லது ஜீவனாம்ச பாக்கி அல்லது வருடவர்த்தனை பாக்கி கிடைக்க வேண்டுமென்றோ போடப்படும் தாவாக்களுக்கு தாவா செய்யப்படும் தொகையின் பேரில் கோர்ட்பீசுக் கட்டணம் கணக்கிடப்படும்.

### ஜீவனாம்சம் முதலிய வியாஜ்யங்கள் (செக்ஷன் 23)

ஜீவனாம்சம் கிடைக்க வேண்டுமென்று போடப்படும் தாவாக்களுக்கு, ஒரு வருடத்திற்கு எவ்வளவு ஜீவனாம்சம் வேண்டுமென்று கேட்கப் படுகிறதோ அத்தொகைக்குள்ள கோர்ட்பீசு ஸ்டாம்பு கட்டவேண்டும். உதாரணமாக ஒரு ஸ்திரீயானவள் தனக்கு வருடம் ஒன்றுக்கு ரூ. 200 ஜீவனாம்சம் கிடைககவேண்டுமென்று தாவா செய்தால், அத்தாவாவுக்கு ரூ. 200க்குள்ள ஸ்டாம்பு அதாவது ரூ. 15 கோர்ட்பீசு ஸ்டாம்பு பிராதில் ஒட்டவேண்டும். ஏற்கனவே உள்ள ஜீவனாம்சத்தைக் குறைக்கவேண்டுமென்றோ அதிகப்படுத்தவேண்டுமென்றோ போடப்படும் தாவாக்களுக்கு — ஒரு வருடத்தில் எவ்வளவு ரூபாய் குறைக்கவேண்டுமென்றோ, அதிகப்படுத்தவேண்டுமென்றோ கேட்கப்படுகிறதோ அவ்வித்தியாசத் தொகைக்குள்ள ஸ்டாம்பு கட்டினால் போதும். ஜீவனாம்சம் தவிர வேறு வருடவர்த்தனையாகவோ, குறிப்பிட்ட கெடுவுக்குக் கெடு வர்த்தனையாகவோ தொகை கிடைக்கவேண்டுமென்று கேட்கும் தாவாகளுக்கு, ஒரு வருடத்திற்கு எவ்வளவு தொகை கேட்கப்படுகிறதோ அதைப்போல 5 மடங்குத் தொகைக்குள்ள ஸ்டாம்பு கட்டவேண்டும். மொத்த கெடுக்களே 5 வருடங்களுக்குக் குறைவாக இருந்தால், எல்லாக் கெடுக்களிலும் கிடைக்கவேண்டிய மொத்தத் தொகை

எவ்வளவோ அதற்கான ஸ்டாம்பு கட்ட வேண்டும்.

## ஜங்கம சொத்துக்கள் (செக்‌ஷன் 24)

பாத்தியங்களைக் காண்பிக்கக் கூடிய தஸ்த வேஜூகளைத் தவிர வேறு வகை ஜங்கம சொத்துக்கள் கிடைக்கவேண்டு மென்று போடப்படும் தாவாக்களுக்கு — ஜங்கம சொத்திற்கு ஒரு மார்கெட்டு மதிப்பு இருந்தால் அம்மதிப்புத் தொகைக்குள்ள ஸ்டாம்பு கட்டவேண்டும். தாவாவில் கேட்கப்படும் ஜங்கம சொத்துக்கு மார்கெட்டு மதிப்பு ஒன்று மில்லாவிட்டால், வாதி தாவாவில் என்ன மதிப்புப் போடுகிருரோ, அதற்குள்ள ஸ்டாம்பு செலுத்தவேண்டும். பாத்திய தஸ்தா வேஜூகள் கிடைக்கவேண்டுமென்று கேட்கப்படும் தாவாக்களுக்கு, அத்தஸ்தவேஜூக்கள் மூலம் பணத்தைப்பற்றியோ, வேறு சொத்துக்களைப் பற்றியோ வாதிக்கு ஏற்படக்கூடும் பாத்திய மானது மறுதளிக்கப்பட்டாலும் சரி, அதைப் பற்றிய பிரச்னை ஏற்பட்டாலும் சரி, தஸ்த வேஜியில் கண்ட பணம் அல்லது சொத்து மதிப்பில் 4ல் 1 பங்குத்தொகையேதான் தாவா வின் மதிப்பாகும். அம்மதிப்புக்குள்ள ஸ்டாம்பு கட்டவேண்டும். வாதியின் பாத்தியற்றைப் பற்றிய பிரச்னை ஏற்படாவிட்டால், அவ்வித தாவாக்களில் வாதி தம் இஷ்டபடி எந்த மதிப்பும் போட்டுக்கொண்டு அதற்கான ஸ்டாம்புக் கட்டணம் கட்டலாம்.

## "டிக்ளரேஷன் ஸூட்" அல்லது பாத்திய நிர்ணயத் தாவா (செக்‌ஷன் 25)

(a) ஒரு சொத்து வாதிக்குச் சொந்த மென்று நிர்ணயம் செய்து, அச்சொத்தும் வாதிக்கு சுவாதீனம் கொடுக்கப்பட வேண்டு மென்று கேட்கப்படும் தாவாக்களுக்கு, சொத் தின் காலக்கிரய மதிப்பு எவ்வளவோ அதற் கான ஸ்டாம்பு கட்டவேண்டும். இம்மதிப் பானது ரூ. 300க்குக் குறைவாக இருந்தால் ரூ. 300க்குள்ள ஸ்டாம்பு கட்ட வேண்டும். அதாவது இவ்வித தாவாக்களுக்கு குறைந்தது ரூ. 22-8-0 கோர்ட் பீசுக்கட்ட வேண்டும். (b) ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வரையில் அச்சொத்தில் வாதிக்குள்ள பாத் தியத்தை நிர்ணயம் செய்து, அக்காரணத்தால் பிரதிவாதி களுக்குத் தடை உத்திரவுகள் (இன்ஜங்ஷன்) பிறப்பிக்க வேண்டுமென்று கேட்கும் தாவாக்களுக்கு (அதாவது ஸ்தாவர சொத்தின் சுவாதீனம் வேண்டுமென்று கேட்கப்படாமல் 'இன்ஜங்ஷன்' மட்டில் கேட்கப் படும் தாவாக்களுக்கு) ஸ்தாவர சொத் தின் காலக்கிரயம் (மார்க்கெட் மதிப்பு) எவ்வளவோ அதற்குத் தக்க ஸ்டாம்பு கட்டவேண்டும். இது ரூ. 300-க்குக் குறை வாக இருந்தால் ரூ. 300-க்குள்ள ஸ்டாம்பு, அதாவது ரூ. 22-8-0 கட்ட வேண்டும். (c) ஒரு அடையாளம், பெயர், புத்தகம், படம், அல்லது சித்திரம் முதலிய வற்றை உபயோகிக்கவோ விற்பனை செய்ய வோ, அச்சிடவோ, பிரசுரப்படுத்தவோ வாதிக்குத்தான் ஏகதேச பாத்திய மிருக்கிற தென்று 'டிக்ளரேஷன்' செய்ய வேண்டு மென்று கேட்கப்படும் தாவாக்களுக்கு, வாதி தம்முடைய இஷ்டப்படி மதிப்பும் போட்டு அதற்கான ஸ்டாம்பு கட்ட வேண்டும். ஆனல் குறைந்த பட்சமாக ரூ. 500 மதிப்புக் குள்ள ரூ. 37-8-0 ஸ்டாம்பு கட்ட வேண்டும். (d) இம்மூன்று வகை தவிர மற்ற 'டிக்ள ரேஷன்' தாவாக்களுக்கு குறைந்த பட்சம் மதிப்பு ரூ. 400க்குள்ள ஸ்டாம்பு ரூ. 30-0-0 கட்டவேண்டும். ஆனல் வாதி தம்முடைய தாவாவுக்கு அதிக மதிப்புப் போட்டால் அதற்கான ஸ்டாம்பு கட்டவேண்டும்.

18738

## சுவீகார வியாஜ்யங்கள் (செக்ஷன் 26)

ஒரு சுவீகாரம் சட்டப்படி செல்லு மென்றோ, செல்லாதென்றோ, அல்லது சுவீ காரம் ஏற்பட்டதா இல்லையா என்பதைப்பற்றி யோ நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று போடப்படும் 'டிக்ளரேஷன்' தாவாக்கள்— முன்சிப்கோர்ட்டில் போடப்பட்டால்கோர்ட் பீசு ரூ. 50 கட்டவேண்டும்; இவை சென்னை சிடிசிவில் கோர்ட்டிலோ, அல்லது சப்கோர்ட் டிலோ, ஜில்லாக் கோர்ட்டிலோ போடப் பட்டால் சுவீகாரத்தால் பாதிக்கப்படும் சொத்துக்களின் மதிப்பு ரூ. 10,000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் கோர்ட்பீசுக் கட்டணம் ரூ. 100; அதற்கு அதிக மதிப் புள்ள சொத்தாக இருந்தால் கோர்ட்பீசுக் கட்டணம் ரூ. 500. ஹைகோர்ட்டில் போடப் படும் தாவாவுக்கும் கட்டணம் ரூ. 500 தான்.

## 'இன்ஜங்ஷன்' அல்லது தடை உத்தரவு கோரும் தாவாக்கள் (செக்ஷன் 27)

(a) ஸ்தாவர சொத்துக்களைப் பற்றிய இன்ஜங்ஷன் தாவாக்களில், வாதியின் பாத்தியம் மறுக்கப்படுகிறதென்று வாதி

சொன்னாலும் சரி, அல்லது வாதியின் பாத்தியத்தைப்பற்றிய ஒரு பிரச்னை ஏற்பட்டாலும் சரி — ஸ்தாவர சொத்தின் காலக்கிரய மதிப்பில் சரிபாதிக்குள்ள ஸ்டாம்பு கட்ட வேண்டும். ஆனால் இச்சரிபாதி மதிப்பானது ரூ. 300கருக் குறைவாக இருந்தால் ரூ. 300க்குள்ள ஸ்டாம்பு அதாவது ரூ. 22-8-0 ஸ்டாம்பு கட்டவேண்டும் (b) ஒரு அடையாளம் பெயர், புத்தகம், அல்லது சித்திரம் முதலியவற்றை உபயோகிக்கவோ, விற்கவோ, அச்சிடவோ, பிரசுரப்படுத்தவோ, வாதிக்கு ஏகதேச பாத்தியமிருப்பதால் பிரதிவாதிக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கவேண்டுமென்று கேட்கப்படும் தாவாக்களுக்கு குறைந்தபட்சம் ரூ. 500 மதிப்புக்குள்ள ரூ. 37-8-0 ஸ்டாம்பு கட்டவேண்டும். ஆனால் வாதி அதிக மதிப்புப் போட்டு அதற்கான ஸ்டாம்புக் கட்டலாம் (c) மற்ற வகை இன்ஜங்ஷன் தாவாக்களுக்குக் குறைந்தது ரூ. 400 மதிப்புக்குள்ள ரூ. 30-0-0 ஸ்டாம்பு கட்டவேண்டும். ஆனால் வாதி கேட்கும் பரிகாரத்திற்கு அதிக மதிப்புப் போட்டு அதற்கான ஸ்டாம்பும் கட்டலாம்.

## 'டிரஸ்ட்' அல்லது தர்ம சொத்துக்கள் சம்பந்தமான தாவாக்கள் (செக்ஷன் 28)

'டிரஸ்டு' அல்லது தர்ம சொத்துக்களை சுவாதீனம் கேட்டோ அல்லது 'டிரஸ்டு' சொத்து சம்பந்தமான பாத்தியங்களை நிர்ணயம் செய்யவோ, அக்காரணமாக வேறு பரிகாரங்கள் கேட்டோ டிரஸ்டிகளுக்குள்ளோ, அல்லது டிரஸ்டி என்று பாத்தியம் கொண்டாடுபவர்களுக்குள்ளோ, அல்லது டிரஸ்டியாக இருப்பவருக்கும் முன்பு டிரஸ்டியாக இருந்தவருக்கு மிடையேயோ போடப்படும் தாவாக்களுக்கு — டிரஸ்டு சொத்தின் மார்கெட் மதிப்பில் 5-ல் 1 பங்கு மதிப்புக்குக் கோர்ட் பீசு கட்டணம் கட்டவேண்டும். ஆனால் மதிப்பு எவ்வளவாக இருந்தாலும் ரூ. 200க்கு மேல் ஸ்டாம்பு கட்டவேண்டியதில்லை. ஆனால் டிரஸ்டு சொத்துக்களுக்கு யாதொரு மார்கெட் மதிப்பும் இல்லாதிருந்தால் ரூ. 75 ஸ்டாம்பு கட்டவேண்டும்; அதாவது ரூ. 1000 மதிக்கான ஸ்டாம்பு கட்டவேண்டும். டிரஸ்டு சொத்துக்கு மார்கெட் மதிப்பு இல்லாவிட்டால், எந்தக் கோர்ட்டில் தாவாவைத் தாகல் செய்வது என்பதற்காக வாதி தம்முடைய இஷ்டப்படி மதிப்புப் போட்டு, அம்மதிப்புள்ள தாவாவை விசாரிக்க அதிகாரமுள்ள கோர்ட்டில் அத்தாவாவைத் தாகல் செய்யலாம். இந்த ஷரத்து சம்பந்தபட்டவரையில் இந்து அல்லது முஸ்லீம் அல்லது வேறு மத சம்பந்தமான சொத்துக்களும் தர்மம் சம்பந்தமான சொத்துக்களும் 'டிரஸடு' சொத்துக்களாகவே பாவிக்கப்படும்; அவ்வித சொத்தைப் பரிபாலனம் செய்பவர் 'டிரஸ்டி'யாக பாவிக்கப் படுவார்.

## ஆறுமாதத்திற்குள் சுவாதீனம் இழந்த சொத்தைத் திருப்ப அடையத் தாவா (செக்ஷன் 29)

1877-ம் வருடத்திய ஸ்பெஷிபிக் ரிலீப்' ஆக்ட்' என்ற சட்டத்தின் செக்ஷன் 9-ன்படி ஸ்தாவர சொத்தின் சுவாதீனம் இழந்தவர் 6 மாதத்திற்குள் திரும்பவும் தமக்குச் சொத்து சுவாதீனம் கிடைக்கவேண்டுமென்று போடும் தாவாவுக்கு, ஸ்தாவர சொத்தின் மார்கெட் மதிப்புத் தொகையில் சரிபாதித் தொகைக்குள்ள ஸ்டாம்பு கட்டவேண்டும்; ஆனால் குறைந்தபட்சம் ரூ. 30 ஸ்டாம்பு கட்டணம் கட்டவேண்டும்.

## ஸ்தாவர சொத்து சுவாதீனம் கிடைக்க தாவா (செக்ஷன் 30)

ஸ்தாவர சொத்துக்களின் சுவாதீனம் கிடைக்கவேண்டுமென்று போடப்படும் தாவாக்களுக்கு சொத்தின் மார்கெட் மதிப்பின்பேரில் ஸ்டாம்பு கட்டவேண்டும். ஆனால் குறைந்தது ரூ. 30 ஸ்டாம்பு கட்டணம் கட்டவேண்டும்.

## வழிநடை, வெளிச்சம், காற்று போன்ற வசதிகள் சம்பந்தமான தாவாக்கள் (செக்ஷன் 31)

இவ்வித தாவாக்களுக்கு (Suit relating to Easements) வாதி தம் இஷ்டப்படி மதிப்புப் போட்டு ஸ்டாம்பு கட்டலாம்; ஆனால் குறைந்த பட்சம் ரூ. 22-8-0 ஸ்டாம்பு கட்டவேண்டும். அதே தாவாவில் நஷ்டஈடும் கேட்கப்பட்டால் அதற்குத் தனியாக ஸ்டாம்பு உண்டு.

## அடமானம்பற்றிய வியாஜ்யங்கள் (செக்ஷன் 33)

அடமானத் தொகை கிடைக்கப்போடப்படும் தாவாக்களுக்கு, பிராதில் கேட்கப்படும் தொகைக்குள்ள ஸ்டாம்பு கட்டணம் கட்டவேண்டும். அத்தாவாவில் முன்பெந்தகதாரும்

கட்சிக்காரராகச் சேர்க்கப்பட்டு, அவர் தமக்குச் சேரவேண்டிய தொகைக்கும் டிக்ரியாக வேண்டுமென்று ஸ்டேட்மெண்ட் கொடுத்தால், அவர் கேட்கும் தொகைக்கு அவர் ஸ்டாம்பு கட்டவேண்டும். மேலும் அடமான சொத்து கோர்ட் ஏலம் போய், முன் அடமானதாரரோ, பின் அடமானதாரரோ, ஏலத் தொகையிலிருந்து தம்முடைய அடமானத் தொகையும் தமக்குக் கிடைக்கவேண்டுமென்று மனுப்போட்டால் அம்மனுவில் அவர் கேட்கும் தொகைக்குள்ள ஸ்டாம்பு கட்டவேண்டும், ஏற்கனவே ஸ்டேட்மெண்டுக்காகவோ வேறு நடவடிக்கைகளிலோ ஸ்டாம்பு கட்டியவர்கள் மறுபடியும் இதற்கு ஸ்டாம்பு கட்டவேண்டியதில்லை. அடமான தாவா சம்பந்தமாக வேறு சில ஷரத்துக்களும் இருக்கின்றன.

## கணக்குக் கேட்கும் தாவாக்களும் - கூட்டு வியாபாரத்தைக் கலைக்கப் போடப்படும் தாவாக்களும் (செக்ஷன் 35, 36)

இவ்வித தாவாக்களில் வாதி தம்முடைய இஷ்டப்படி மதிப்புப் போட்டு அதற்கு ஸ்டாம்பு கட்டவேண்டும். ஆனால் அதிகத் தொகைக்கு டிக்ரி ஆனால், டிக்ரி ஆகும் தொகைக்குள்ள ஸ்டாம்பு பாக்கியைக் கட்டிவிடவேண்டும். பிரதிவாதிக்குத் தொகை சேரும்படி டிக்ரி ஆனாலும் அத்தொகைக்குப் பிரதிவாதி ஸ்டாம்புக் கட்டவேண்டும்.

## பாக வியாஜ்யங்கள் (செக்ஷன் 37)

பொது சொத்திலோ, பொதுக் குடும்பச் சொத்திலோ பாத்தியமுள்ள ஒருவர், சுவாதீனம் இல்லாமலிருந்து, தம்முடைய பாகத்தைப் பிரித்து அதைத் தம்முடைய சுவாதீனத்தில் கிடைக்கும்படி போடப்படும் தாவாவுக்கு-வாதியின் வீத சொத்தின் மார்கெட் மதிப்பின் பேரில் ஸ்டாம்பு கட்டவேண்டும். ஆனால் பொது சொத்தையோ, குடும்ப சொத்தையோ, மற்ற பாகஸ்தர்களுடன் தாமும் சுவாதீனத்தில் வைத்திருக்கும் ஒருவர், தம்முடைய பாகத்தைப் பிரித்து அதைத் தம்முடைய சுவாதீனத்தில் விட்டுவிடவேண்டுமென்று கேட்கும் தாவாக்களுக்கு-டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டில் தாவா போட்டால் ரூ. 30-ம், சென்னை சிடிசிவில் கோர்ட்டிலோ அல்லது சப்கோர்ட் அல்லது ஜில்லா கோர்ட்டிலோ தாவா செய்தால்-வாதியின் பாக மதிப்பு ரூ. 5000 அல்லது அதற்குக் குறைவாக இருந்தால் ஸ்டாம்பு ரூ. 30-ம்; மதிப்பு ரூ. 5000-க்கு மேற்பட்டு ரூ. 10,000-க்குள் இருந்தால் ஸ்டாம்பு ரூ. 100-ம்; மதிப்பு ரூ. 10,000 அல்லது அதிகமாக இருந்தால் ரூ. 200-ம் ஸ்டாம்ப் கட்டவேண்டும். ஹைகோர்ட்டில் போடப்படும் தாவாக்களுக்கு ஸ்டாம்பு ரூ. 300. மேற்படி தாவாக்களில் தமக்கும் பாகம் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று கேட்கும் பிரதிவாதிகளும் ஸ்டேட்மெண்டுக்கு ஸ்டாம்பு கட்டவேண்டும். வாதியாக இருந்தால் எவ்வளவு ஸ்டாம்பு கட்டவேண்டுமோ அதில் பாதித் தொகையை அவ்விதப் பிரதிவாதிகள் கட்டவேண்டும்.

## ஜப்தியை ரத்து செய்யத் தாவா (செக்ஷன் 41)

சிவில் அல்லது ரிவின்யூ கோர்ட்டால் செய்யப்பட்ட ஜப்தியை ரத்து செய்ய வேண்டுமென்றோ, பாத்திய மனுவின் பேரில் ஏற்பட்ட உத்தரவை ரத்துசெய்ய வேண்டுமென்றோ கேட்கும் தாவாக்களுக்கும் எந்தத் தொகைக்கு ஜப்தி ஏற்பட்டதோ அதற்கோ; அல்லது ஜப்தி செய்யப்பட்ட சொத்தின் மார்கெட் மதிப்பில் 4-ல் 1 பங்குக்கோ உள்ள ஸ்டாம்பு இரண்டில் எது குறைவோ அதைக் கட்டவேண்டும். வேறு சுருக்குவகை உத்தரவுகளை (Summary decision or order) ரத்து செய்வதற்காகப் போடப்படும் தாவாக்களுக்கும் சொத்தின் மார்கெட் மதிப்பில் 4ல் 1 பங்கு மதிப்புக்குள்ள ஸ்டாம்புக் கட்டவேண்டும்.

## நிலக்காரருக்கும் குத்தகைதாரருக்குமிடையே போடப்படும் தாவாக்கள் (செக்ஷன் 43)

இவ்வித தாவாக்களில் தாவாவுக்கு முந்திய ஒருவருடக் குத்தகைத் தொகை எவ்வளவோ அதற்குள்ள ஸ்டாம்புக் கட்டவேண்டும். குத்தகை தாரிடமிருந்து சொத்து சுவாதீனம் கிடைக்க வேண்டுமென்று போடப்படும் தாவாக்களுக்கும் அப்படியே.

குறிப்பு:—புதிய கோர்ட் பீசுச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்கள் பிந்திய "வக்கீல்" இதழில் விளக்கப்படும்.

# 1955 - 56 வருடத்திய வருமானவரி விகிதங்கள்

[1955-ம் வருடத்திய 15-வது மத்தியச் சட்டமாகிய நிதிச் சட்டத்தால் வருமான வரிச் சட்டத்திலும் இந்திய தீர்வைப்பட்டிச் சட்டத்திலும், மத்திய சுங்கச் சட்டத்திலும் பல திருத்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. வருமானவரி விகித மாறுதல்கள் மட்டில் இங்கே விளக்கப்பட்டிருக்கின்றன.]

## வரிகள்

தனி நபர்களுக்கு முந்திய வருட வருமானம் ரூ. 4200-க்குமேல் இருந்தால் தான் 1955—56 வருடத்தில் வருமான வரி விதிக்கப்படும். பிரிபடாத இந்தக் குடும்பங்கள் சம்பந்தப்பட்ட வரையில்- முந்திய வருடக் கடைசியில் மேஜரான அங்கத்தினர்களோ அல்லது தனித் தனிக் கிளையைச் சேர்ந்த அங்கத்தினர்களோ இரண்டு நபர்கள் அடங்கிய குடும்பமாக இருந்தால் ரூ. 8400-க்கு மேலும் அதே விதம் குறைந்தது நான்கு நபர்கள் அடங்கிய குடும்பமாக இருந்தால் ரூ. 13600-க்கு மேலும் வருமானம் இருந்தால்தான் வருமான வரி உண்டு. சர்சார்ஜ் சம்பந்தப்பட்ட வரையில் தனி நபர்களுக்கு ரூ. 7200 வரையிலும், மேற்கண்டபடி இரண்டு நபர்களடங்கிய குடும்பங்களுக்கு ரூ. 14,400 வரையிலும் குறைந்தது நான்கு நபர்களடங்கிய குடும்பங்களுக்கு ரூ. 21,600 வரையிலும் 'சர்சார்ஜ்' வரி விதிக்கப்பட மாட்டாது.

மேற்கண்ட விதிவிலக்குகளுக்குட்பட்டு வருமானவரி விகிதங்கள் பின்வருமாறு:

A

### கலியாணமான தனி நபர்களுக்கும், இந்து பிரிபடாத குடும்பங்களுக்கும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மொத்த வருமானத்தின் முதல் ரூ. 2000-க்கு | | வருமான வரி இல்லை | சர்சார்ஜ் இல்லை |
| | | | ரூ. அ. பை. | |
| 2 | அடுத்த ரூ. 3000-க்கு | ரூ. 1-க்கு வரி | 0 0 9 | வருமான வரியில் 20ல் 1-பங்கு |
| 3 | அடுத்த ரூ. 2500க்கு | ,, ,, | 0 1 9 | ஷை |
| 4 | அடுத்த ரூ. 2500க்கு | ,, ,, | 0 2 3 | ஷை |
| 5 | அடுத்த ரூ. 5000க்கு | ,, ,, | 0 3 3 | ஷை |
| 6 | பாக்கி ஜாடா வருமானத்திற்கும் | ,, ,, | 0 4 0 | ஷை |

### கலியாண மாகாத நபர்களுக்கும், ரிஜிஸ்டராகாத கூட்டு வியாபாரங்களுக்கும் சங்கங்களுக்கும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | மொத்த வருமானத்தின் முதல் ரூ. 1000-க்கு | | வருமான வரி இல்லை | சர்சார்ஜ் இல்லை |
| | | | ரூ. அ. பை. | |
| 2 | அடுத்த ரூ. 4000-க்கு | ரூ. 1-க்கு வரி | 0 0 9 | வருமான வரியில் 20ல் 1-பங்கு |
| 3 | அடுத்த ரூ. 2500-க்கு | ,, ,, | 0 1 9 | ஷை |
| 4 | அடுத்த ரூ. 2500-க்கு | ,, ,, | 0 2 3 | ஷை |
| 5 | அடுத்த ரூ. 5000-க்கு | ,, ,, | 0 3 3 | ஷை |
| 6 | பாக்கி ஜாடா வருமானத்திற்கும் | ,, ,, | 0 4 0 | ஷை |

B

கம்பெனிகளின் மொத்த வருமானம் ஜாடாவுக்கும் ரூ. 1-க்கு 0-4-0 வீதம் வருமான வரியும் வருமான வரியில் 20ல் 1 பங்கு சர்சார்ஜ் வரியும் உண்டு.

C

ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கம்பெனிகள் போலவே வருமான வரியும் சர்சார்ஜ் வரியும் உண்டு.

### சூபர் டாக்ஸ் வரி

வருடமானம் ரூ. 50,000க்கு மேற்பட்ட தனி நபர்களுக்கும் இந்து புரிபடாத குடும்பங்களுக்கும், மேலே கண்ட வருமானவரி, அதற்கு சர்சார்ஜ் இவை தவிர சூபர்டாக்ஸ் வரியும் அதற்கு சர்சார்சும் உண்டு.

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னை சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

### 37. சென்னை விவசாயிகள் கடன் வாய்தாச் சட்டத் திருத்தம்.

Madras Indebted Agriculturists Temporary Relief Amendment Act. 1954. (26-1-1954) கடன்பட்ட விவசாயிகள்மீது கோர்ட்டில் ஒருவருடத்திற்குத தாவா முதலிய எவ்வித நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளக் கூடாதென்று முன்பு இருந்த 1954-ம் வருடத்திய 5-வது சட்டத்தை 1-3-1955 வரையில் நீடித்த திருத்தச் சட்டம். 1954-ம் வருடத்திய 5-வது சட்டம் 1-3-1955ல் அமுல் இழந்து அதற்குப்பதிலாக 1-3-1955 முதல் 1955-ம் வருடத்திய 1-வது சென்னைச் சட்டமாகிய விவசாயிகள் கடன் தவணைச் சட்டம் அமுலுக்கு வந்து விட்டது கவனிக்கவும். "வக்கீல்" 1955 இதழ் 2 பார்க்கவும்.

### 39. மோட்டார் வண்டிச் சட்டத் திருத்தம்

Motor Vehicles - Madras Amendment Act 1954. (22-1-1955ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றது.) மோட்டார் வண்டிச் சட்டத்தின் செக்ஷன் 64 A என்ற ஷரத்து ரத்து செய்யப்பட்டுள்ளது. செக்ஷன் 64A என்பது - இச்சட்டப்படி நியமிக்கப் பட்டுள்ள எந்த அதிகாரியின் எவ்விதமான உத்தரவுகளையும் தாமாகவோ, மனுவின் பேரிலோ, பரிசீலனை அல்லது 'ரிவிஷன்' செய்யும் அதிகாரத்தை ராஜ்ய சர்க்காருக்குப் பொதுவாகக் கொடுத்த ஷரத்து. இந்த ஷரத்து ரத்துசெய்யப்பட்டதால், இனி ராஜ்ய சர்க்கார் அவ்வித அதிகாரத்தைச் செலுத்த முடியாது. ஆனால் செக்ஷன் 64-ன்படி எந்த எந்த விஷயங்களைப்பற்றி அப்பீல் அதிகாரிக்கு அப்பீல் செய்து கொள்ளலாமென்று கண்டிருக்கிறது. அவ்விஷயங்களைத் தவிர போக்கு வரத்து சபைகளின் மற்ற உத்தரவுகள் சட்டப்படிக்கும் கிரமமாகவும் இருக்கின்றனவா என்று பரிசீலனை செய்து யுக்தமான உத்தரவுகள் விதிக்கும் அதிகாரம் ராஜ்யசர்க்காருக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கிறது. புதிய ஷரத்து செக்ஷன் 64 (2). மேலும் செக்ஷன் 43A என்பதில் ஒரு புதிய ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது. அதாவது செக்ஷன் 47ல் கண்ட விஷயங்களை பார்த்துப் ஆலோசித்து ஒரு புதிய மார்க்கத்தை ஆரம்பிக்கும்படியாவது, ஏற்கனவே உள்ள ஒருமார்க்கத்தை விஸ்தரிக்கும்படியாவது அல்லது குறிப்பிட்ட மார்க்கத்தில் அதிக பஸ்களையோ, அல்லது பஸ்களின் எண்ணிக்கையை குறைக்கவோ பிராந்தீய போக்கு வரத்து அதிகார சபைக்கு உத்தரவு பிறப்பிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

### 40. பொது விற்பனை வரிச்சட்டத் திருத்தம்.

Madras Sales Tax - Third Amendment Act 1954. (23-2-1955) 1954-ம் வருடத்திய 20-வது திருத்தச் சட்டத்தால் மில் ஜவுளி விற்பனைக்கு ஒரு அதிக விற்பனை வரி விதிக்கப்பட்டது. ("வக்கீல்" 1954 செப்டம்பர் இதழ் பக்கம் 4 பார்க்கவும்.) பருத்தியல்லாத வேறு ஒரு சரக்கைக்கொண்டு 17 அல்லது அதிக கவுண்டு உள்ள நூலால் ஆலைகளில் தயாரிக்கப்பட்ட மில் ஜவுளிக்கு சாதாரண காலணா வரி தவிர, ஒருகட்டத்தில் மட்டில் ரூ. 1க்கு ஒரு அணா மூன்று தம்படி அதிக விற்பனைவரி விதிக்கப்பட்டது. பருத்தி நூல் மில் ஜவுளிக்கு 35 அல்லது அதிக கவுண்டுக்கு மேல் இருந்தால்தான் இவ்வதிக வரி உண்டு. அந்த கவுண்டுக்குக் குறைந்த பருத்தி நூல் மில் ஜவுளிக்கு அதிக விற்பனை வரி கிடையாது. இதில் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. அதாவது பருத்தி நூலைக்கொண்டும், வேறு ஒரு பொருளைக் கொண்டும் நெய்யப் பட்ட துணிக்கு எவ்விதம் அதிக விற்பனை வரி விதிக்க வேண்டுமென்ற சந்தேகத்தை இத் திருத்தச் சட்டம் நிவர்த்தி செய்கிறது. அதாவது 35 கவுண்டுக்குட்பட்ட முற்றிலும் பருத்தி நூலைக் கொண்டே நெய்யப்பட்ட ஜவளிக்கு மட்டிலே தான் இந்த அதிக விற்பனை வரி கிடையாது என்றும்; பருத்தி நூலும் வேறு வகை நூலும் சேர்த்து மில்லில் நெய்யப்பட்ட துணியானது 17 அல்லது அதிக கவுண்டு நூலால் நெய்யப்பட்டிருந்தால் இந்த அதிக வரி உண்டென்றும் செக்ஷன் 3 (2)

ஷரத்தை இத்திருத்தச் சட்டம் திருத்தியிருக்கின்றது. முன் அதிக வரி விதிப்பு அமுலுக்கு வந்த தேதியாகிய 23-8-1954 தேதி முதலே இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும்.

## 1955-ம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

1. சென்னை விவசாயிகள் கடன் தவணைச் சட்டம் Madras Indebted Agriculturists - Repayment of Debts - Act 1955. (1—3—1955) இச்சட்டம் விவரமாக "வக்கீல்" 1955 இதழ் 2ல் விளக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் ஆங்கில வாசகமும் அதே இதழில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

2. தென்கன்னட குத்தகைதார் பாதுகாப்புச் சட்டத் திருத்தம்.

South Kanara cultivating Tenants Protection Amendment Act 1955. (2-3-1955) இச்சட்டம் இன்னும் ஒரு வருடத்திற்கு அமுலில் இருக்கும்படி திருத்தப்பட்டிருக்கிறது.

3. சென்னை நீர்ப்பாசன நில அபிவிருத்திக் கட்டண விதிப்புச் சட்டம்.

Madras Irrigation - Levy of Betterment contribution Act 1955 (16-3-1955) இச்சட்டம் "வக்கீலி"ல் விவரமாக விவரிக்கப்படும்.

4. சென்னை நகர முனிசிபாலிடி சட்டத் திருத்தம்.

Madras city Municipal Amendment Act 1955. (16-3-1955) அம்மை குத்திக் கொள்ள, ஒரு கொள்கைப்படி, ஆட்சேபனை செய்பவர்களுக்கு சென்னை நகரத்திலும் விதி விலக்கு அளிக்க சாத்தியமாகும்படி இச்சட்டத்தின் செக்ஷன் 344 என்ற ஷரத்து திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. மற்ற முனிசிபாலிடி சட்டத்திலும், ஜில்லா போர்டு சட்டத்திலும், அவ்விதம் விதிவிலக்கு அளிக்க அதிகாரம் கொடுக்கும் ஷரத்து இருக்கிறது. அதைப்போலவே இருக்கும்படி சென்னை சிடி முனிசிபல் சட்டம் இப்போது திருத்தப்பட்டிருக்கிறது.

5. சென்னைத் தோட்ட விவசாய வருமான வரிச்சட்டம்.

Madras plantations Agricultural Income Tax Act 1955. (30-3-1955) இச்சட்டத்தின் முக்கிய ஷரத்துக்கள் "வக்கீலி"ல் விவரமாக விளக்கப்படும்.

6. சென்னை அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம்.

Madras Appropriation Act 1955. (31-3-1955) 1-4-1955 முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் சென்னை ராஜ்யப் பொது நிதியிலிருந்து இச்சட்டத்தில் குறிப்பிட்ட விஷயங்களுக்காக ரூ. 1,12,71,50,400 செலவு செய்யச் சென்னை சட்ட சபையானது, சென்னை ராஜ்ய அரசாங்கத்திற்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

7. சென்னை அரசாங்கச் செலவு அனுமதி (இரண்டாவது) சட்டம்.

Madrss Appropriation (No 2) Act 1955. (31-3-1955) சென்ற வருடத்தில் அதாவது 1-4-1954ல் ஆரம்பித்த நிதி வருடத்தில், ஏற்கனவே அனுமதிக்கப்பட்டது போக இன்னும் அதிகப்படியாக ரூ. 17,44,65,100 செலவு செய்ய சென்னை அரசாங்கத்திற்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

8. பொது விற்பனை வரிச் சட்டத் திருத்தம்.

Madras General sales Tax Amendment Act 1955. ஒவ்வொரு வருடத்திலும் ஒரு வியாபாரியானவர் செய்யும் மொத்த விற்பனைக்கு, விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 3 (1) என்ற ஷரத்தால், விற்பனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வருடம் முடிவதற்கு முன்பே மாதா மாதம் முன்னதாகவே உத்தேசமாக விற்பனை வரியைச் சர்க்கார் வசூல் செய்யும் அதிகாரமானது இச்சட்டத்தில் இதற்குமுன் இல்லை. ஆனால் அவ்வித அதிகாரத்தை மொத்த வியாபார வரி விதிப்பு விதிகளால் விற்பனை வரி அதிகாரிகளுக்குச் சென்னை சர்க்கார் அளித்திருந்தனர். அதன்படி வருடம் முடிவதற்கு முன்பே தாற்காலிகமாக வரி விதிப்பு அதிகாரம் கொடுக்கும் விதிகள் செல்லா என்று சமீபத்தில் ஒரு வழக்கில் சென்னை ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர். அதன்பேரில் அவ்விதம், வருடம் முடிவதற்கு முன்பே தாற்காலிக வரி விதிப்பு செய்யலாம் என்று விற்பனை வரிச் சட்டத்தில் செக்ஷன் 3 (1-A) என்று ஒரு புதிய ஷரத்து இத்திருத்தச் சட்டத்தால் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இத்திருத்தமானது விற்பனை வரிச் சட்டம் அமுலுக்கு வந்த தேதி முதலே இருப்பது போலப் பாவிக்கப்படும். அதாவது இத்திருத்தச் சட்டத்திற்கு முன்பே, விதிகளின்படி, தாற்காலிக வரி விதிப்பு செய்து வசூல் செய்ததெல்லாம் செல்லுபடியுள்ளதாகச் செய்யப்பட்டிருக்கின்றன.




இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித் தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர, ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டியே. ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

## விவசாயிகள் கொடுக்கவேண்டிய கடன்

17. கேள்வி: (சந்தா நெ. 2996) ஒரு பெரிய கடையில் ஒரு சிறிய கடைக்காரர் 1953 மே மாதம் முதல் 1953 டிசம்பர் மாதம் வரையில் பத்துவரவு செய்து இருக்கிறார். பெரிய கடைக்காரர் பணம் கேட்கப் போக "நான் விவசாயி. இப்பொழுது கொடுக்க முடியாது" என்று அவர் சொல்லுகிறார். அவருக்குக் கொஞ்சம் நிலம் இருக்கிறது. அவருடைய பாக்கியை பெரிய கடைக்காரர் வசூல் செய்வதற்கு என்ன மார்க்கம்?

பதில்: 1955-ம் வருடத்திய 1-வது சென்னைச் சட்டமாகிய விவசாயிகள் கடன் தவணைச் சட்டப்படி-பத்துவரவு செய்து வந்த அவ்விவசாயியானவர் 1-10-1953 தேதியில் எவ்வளவு பாக்கி கொடுக்க வேண்டுமோ அத்தொகையை மட்டில் அச்சட்டத்தில் கண்ட 4 தவணைகளில் கொடுத்துவர அவருக்கு உரிமை உண்டு. ("வக்கீல்" 1955 இதழ் 2 ல் 'சென்னை விவசாயிகள் கடன் தவணைச் சட்டம்-1955' என்ற சட்ட விளக்கத்தைப் பார்க்கவும்.) 1 - 10 - 1953-க்குப் பிறகு 1953 டிசம்பர் வரையில் ஏற்பட்ட பத்துவரவு பாக்கிக்கு மேற்கண்ட சட்டம் கிடையாது. அதாவது அத்தொகையை விவசாயியானவர் உடனே கொடுத்துவிடக் கடமைப்பட்டவரே. ஆனால் தாவா செய்யும்போது ஜாடாத் தொகைக்கும்தான் தாவா செய்யவேண்டும். டிக்ரி ஏற்படும்போது உடனடியாகக் கொடுக்க வேண்டிய தொகையை உடனே கொடுக்கும்படிக்கும், மேற்கண்ட சட்டப்படி தவணைகளில் கொடுக்கவேண்டிய தொகையை அந்தந்தத் தவணைகளில் கொடுக்கும்படியும் டிக்ரி ஆகும். அவசரப்பட்டு தாவா செய்தால் சில சந்தர்ப்பங்களில் வாதி செலவுதொகையை இழப்பதுடன் பிரதிவாதியின் செலவு தொகையையும் கொடுக்கும்படி நேரிடுமாகையால், விவசாயிகள் கடன் தவணைச் சட்ட ஷரத்துக்களை நன்றாக கவனித்துத் தாவா செய்வது தான் நல்லது.

## நிலச்சுவான்தார்களின் ஏஜண்டுகள்

18. கேள்வி: (நாஷனல் இந்தியா டெக்ஸ் டைல்ஸ்பார்ட்னர் - கரூர்) தஞ்சாவூர் ஜில்லாவிலோ இதர ஜில்லாக்களிலோ, நஞ்சை வயல் குத்தகைதார்கள், நிலச்சுவான் தார்களிடம், நேரில்க்குத்தகைக்கு ஒப்புக் கொண்டு நிலச்சுவான்தார்களிடமே நேரில் நெல் அளக்கவேண்டுமென்ற சட்டம் இப் போது அமுலில் இருக்கிறதா? நிலச்சுவான் தார்கள் நேரில் இருந்து குத்தகை அளந்து வாங்க முடியாதிருக்கும் பக்ஷத்தில் குத்தகை தார்கள் நடந்து கொள்ளுவது எப்படி? நிலச்சு

வான்தார்களின் எழுத்து மூலம் அனுமதியின்றி ஏஜண்டுகள் குத்தகைக்குப் பேசவோ, குத்தகை நெல்லை அளந்து வாங்கவோ கூடுமா?

பதில்: சட்டபூர்வமான ஏஜண்டுகள் செய்யும் காரியம் அந்தந்த ஏஜண்டுக்கு முதலாளியால் அளிக்கப்பட்டிருக்கும் அதிகார வரம்புக்குள் இருந்தால், அது முதலாளியைக் கட்டுப்படுத்தும் என்ற ஒரு பொதுச்சட்ட விதி இருக்கிறது. அதன்படி நிலக்காரர்கள் தாம் செய்ய உரிமை உள்ள எக்காரியங்களையும் ஏஜண்டு மூலமும் செய்யலாம். எழுத்து மூலம் ஏஜண்டுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டுமென்ற கட்டாயமுமில்லை.

## விற்பனை வரியை வசூல் செய்யப் 'பார்டி'யை ஜெயிலில் வைக்க அதிகாரம் உண்டா?

19. கேள்வி: (தண்டபாணி செட்டியார்-பண்ருட்டி) விற்பனை வரியை வசூல் செய்யப் பார்ட்டியை ஜெயிலில் வைக்க அதிகாரம் உண்டா?

பதில்: விதிக்கப்பட்ட விற்பனை வரியைக் கொடுக்காமலிருப்பது, பொது விற்பனை வரிச் சட்டம் செக்ஷன் 15-ன்படி ஒரு குற்றமாகும். இக்குற்றத்திற்காக, வரிகொடுக்கத் தவறியவர் மீது கிரிமினல் வழக்குத் தொடரப்படலாம். கிரிமினல் வழக்கை விசாரிக்கும் மாஜிஸ்ட்ரேட்டானவர், வரிகொடுக்கத் தவறியவர் ரூ. 1000 வரை அபராதம் கொடுக்கும்படி தண்டனை விதிக்கலாம். அபராதம் தவிர எதிரி கொடுக்கவேண்டிய விற்பனைவரி பாக்கி எவ்வளவு என்றும் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும். இத்தொகையும் அபராதத்தைப் போலவே வசூல் செய்யப்படுமென்றும் செக்ஷன் 15-ல் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் குற்றங்களைப்பற்றிய இந்தியன் பீனல் கோடு என்ற சட்டத்தின் செக்ஷன் 40, செக்ஷன் 64 என்ற பொதுச்சட்ட ஷரத்துக்களின்படி, எந்தச் சட்டத்தின் கீழ் அபராத தண்டனை விதிக்கும் எந்தக் கோர்ட்டும், அவ்வபராதம் செலுத்தப்படாவிட்டால், எதிரியானவர் எத்தனை காலம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று தம்முடைய தீர்ப்பிலேயே குறிப்பிட வேண்டுமென்று இருக்கிறது. அபராதத்திற்குத் தகுந்தாப்போல் சிறை தண்டனை விதிக்கப்படும். இது 6 மாதத்திற்குமேல் இருக்காது. (இந்தியன் பீனல் கோடு - செக்ஷன் 67.)

## வார்சு சர்டிபிகேட்

20. கேள்வி: (சுப்பிரமணியம்—கம்பம்.) தகப்பன் இறந்த பிறகு அவருடைய சொத்துக்களுக்கு வார்சு சர்டிபிகேட் (Succession certificate) எப்படி யாரிடம் வாங்க வேண்டும்?

பதில்: இறந்தவருக்குச் சேர வேண்டியதாக இருந்த கடன் தொகைகளை வசூல் செய்ய யாருக்குப் பாத்தியம் என்று நிர்ணயம் செய்வதுதான் 'வார்சு சர்டிபிகேட்'. இறந்தவருடைய கடன் தொகையை வசூல் செய்ய பாத்தியமுள்ள வார்சானவர் 'வார்சு சர்டிபிகேட்' வாங்க முன்சிப் கோர்ட்டிலோ, சப் கோர்ட்டிலோ, ஜில்லா கோர்ட்டிலோ இந்திய வார்சுரிமைச் சட்டத்தின் (Indian Succession Act) செக்ஷன் 372 என்ற ஷரத்தின்படி மனுப்போட வேண்டும். இறந்தவர் சாதாரணமாக எங்கே வசித்து வந்தாரோ, அல்லது அவருக்கு நிச்சயமான வாசஸ்தலம் எதுவும் இல்லாதிருந்தால், அவருடைய சொத்துக்கள் எங்கே இருக்கிறதோ - அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள கோர்ட்டில்தான் வார்சு சர்டிபிகேட் மனுப்போட வேண்டும்.

## பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி

21. கேள்வி: (நரசிம்மம் - ஸ்ரீமுஷ்ணம்) நிர்வாக அதிகாரியுள்ள ஒரு பஞ்சாயத்து போர்டில், பொது ஜனங்கள் "பஞ்சாயத்து போர்டாருக்கு" என்று எழுதி விண்ணப்பங்கள் கொடுத்தால், அவற்றை நிர்வாக அதிகாரியானவர், தமக்கு, அதாவது "நிர்வாக அதிகாரிக்கு"- என்று எழுதினால்தான் விஷயத்தை கவனிக்கப்படுமென்று திருப்பலாமா?

பதில்: பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 30 (c) என்ற ஷரத்தின்படி பஞ்சாயத்தின் நிர்வாக அலுவல்களைக் கவனிக்கவேண்டிய கடமை நிர்வாக அதிகாரிக்கு இருக்கிறது. பஞ்சாயத்து போர்டுக்கு வரும் கடிதங்களையும் விண்ணப்பங்களையும் கவனிக்கவேண்டியது அவருடைய நிர்வாக வேலையே யாகும்.

## கலப்புத் திருமணம் செய்து கொள்வது எச்சட்டப்படி

22. கேள்வி: (குமரய்யன் — மாரியம்மன் கோயில்) 23 வயதுள்ள ஒரு முஸ்லீமானவர் 15½ வயதுள்ள ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயைத் திருமணம் செய்துகொள்ளச் சட்டம் இடங் கொடுக்குமா?

பதில்: 1872-ம் வருடத்திய இந்திய கிறிஸ்தவத் திருமணச் சட்டப்படி (Indian christian Marriage Act-1872) திருமண தம்பதிகளில் ஒருவரோ, இருவருமோ கிறிஸ்தவர்களாக இருந்தால் அச்சட்டப்படிக்குத்தான் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்றும், வேறு விதமாக அவர்கள் செய்து கொள்ளும் திருமணம் செல்லாதென்றும் இருக்கிறது. (செக்ஷன் 4) திருமண ஸ்திரீ இன்னும் மைனராக இருப்பதால், அதாவது 18 வயது பூர்த்தியாகமல் இருப்பதால், அவளுடைய தகப்பன் அல்லது கார்டியனுடைய் சம்மதம் இருந்தால்தான் அச்சட்டப்படித் திருமணம் செய்துகொள்ள முடியும். 1954-ம் வருடத்திய விசேஷ விவாகச் சட்டம் என்கிற பதிவுத் திருமணச் சட்டப்படிக்கும் இவர்கள் இன்னும் இரண்டரை வருடங்கள் கழித்துத் திருமணம் செய்து கொள்ளலாம். ஏனென்றால் விசேஷ விவாகச் சட்டப்படி, திருமணம் செய்து கொள்ள விரும்பும் தம்பதிகளில் ஆணுக்கு 21 வயதும் பெண்ணுக்கு 18 வயதும் பூர்த்தியாகி இருக்கவேண்டும். (1954 "வக்கீல்" இதழ் 11-ல் இருக்கும் விசேஷவிவாகச்சட்ட விளக்கத்தைக் கவனிக்கவும்.)

## வழக்கமான திருவிழாவைக் கோயில் டிரஸ்டி நிறுத்தலாமா?

23. கேள்வி: (சிவாசாரியர் — கோயமுத்தூர்.) அறநிலையப் பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த ஒரு பிரபல தேவஸ்தானத்தில் வருட உற்சவம், தேர் திருவிழா, பழமையாக, நிறுத்தப்படாமல் நடந்து வந்ததைக் காரணமில்லாமல் டிரஸ்டி நிறுத்தலாமா? அப்படி நிறுத்தினால், பொது ஜனங்களோ, சிப்பந்திகளோ நஷ்டஈடு நடவடிக்கை எடுக்கலாமா?

பதில்: சென்னை அறநிலையப் பாதுகாப்புச்சட்டத்தின் செக்ஷன் 24-ன்படி ஒரு கோயிலின் தர்ம கர்த்தா அல்லது டிரஸ்டியின் கடமைகள் — எவை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி, ஒரு கோயிலின் வருமானத்தை டிரஸ்டியானவர் அக்கோயிலில் தொன்றுதொட்டு வழக்கமாகச் செய்யப்பட்டு வரும் காரியங்களுக்காக உபயோகப்படுத்த வேண்டுமென்றும், அது விஷயமாக இச்சட்ட அதிகாரிகள் அவருக்கு விடுவிக்கும் உத்தரவுகளின் படிக்கும் அவர் நடந்துகொள்ளவேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் ஒரு சாதாரணமான மனிதர் தம்முடைய சொந்தப் பணத்தையும் வருமானத்தையும் எவ்வித ஜாக்கிரதையுடன் செலவு செய்வாரோ அதே ஜாக்கிரதையுடன் டிரஸ்டி செலவு செய்யவேண்டுமென்றும் அதே ஷரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

தம்முடைய கடமையைச் செய்யத் தவறிய டிரஸ்டியை 'சஸ்பெண்டு' செய்யவும் நீக்கி விடவும் செக்ஷன் 45 என்ற ஷரத்தினல் டிப்டி கமிஷனருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் ஒரு குறிப்பிட்ட கோயிலில் குறிப்பிட்ட வருடத்தில் இருந்த சூழ்நிலையிலும் சந்தர்ப்பங்களிலும், உற்சவத்தையோ தேர் திருவிழாவையோ நடத்தாமல் ஒரு டிரஸ்டி நிறுத்தியதால் அவருடைய கடமையைச் செய்யவில்லை என்று ஏற்படுமோ — என்பதை கவனிக்கவேண்டும். உதாரணமாக ஒரு வருடத்தில் உற்சவங்களையும் தேர் திருவிழாக்களையும் நிறுத்தி அப்பணத்தைக்கொண்டு இடிந்திருக்கும் அக்கோயிலையோ அதன் கட்டடங்களையோ கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம். அல்லது முக்கியமான கட்டட வேலைகள் செய்தவிட்டதால் உற்சவத்திற்கோ தேர் ஓட்டவோ ஒரு வருடத்தில் பணமே இல்லாமலும் இருக்கலாம். இதுபோன்ற விஷயங்களைக் கவனித்துத்தான் டிரஸ்டியின் கடமை என்ன என்பது நிர்ணயம் செய்யப்படும். எது எப்படி இருந்தாலும், ஒரு கோயிலின் உற்சவங்களோ, தேர் திருவிழாவோ நின்றுவிட்டதால் பொது ஜனங்களோ சிப்பந்திகளோ நஷ்டஈடு கேட்க முடியாது. ஆனல் கடமை தவறிய டிரஸ்டியை நீக்கிவிட வேண்டுமென்று, அக்கரையுள்ள எவரும் டிப்டி கமிஷனருக்கு மனுப் போடலாம்.

## விதவை மருமகளும் அவளுடைய குழந்தையும்

24. கேள்வி: (சுவாமிநாதன் - திருச்செங்கோடு.) ஒரு இந்து ஸ்திரீ மூன்று ஆண்டுகளுக்கு முன் கணவனை இழந்து விட்டாள். கணவன் இறக்கும்போது அவள் எட்டு மாதக் கர்ப்பிணி. இப்போது மூன்று வயதுக் குழந்தை இருக்கிறது. அவளுடைய மாமனுருக்குப் பத்தாயிர ரூபாய் பொறுமான சொத்து இருக்கிறது. சொத்து மாமியார் பெயரில் இருக்கிறது. அவர்களுக்கு மற்றும் ஒரு மகனும் திருமணமான இரண்டு பெண்களும் இருக்கிறார்கள். இதுவரை அவர்கள் விதவை மருமகளுக்கு எவ்வித உதவியும் செய்யவில்லை. சொத்தில் குழந்தைக்கு உரிமை உண்டா? விதவை மருமகள் ஜீவனம்சத்திற்கு வழக்குத் தொடரலாமா? அல்லது பாதிச் சொத்தைக் கிரயம் செய்து கொள்ள உரிமை உண்டா?

பதில்: இன்னும் சில விஷயங்கள் தெரிந்தால்தான் இக் கேள்விக்குப் பதில் சொல்ல

முடியும். அதாவது, (1) மாமனாருக்கு இருக்கும் சொத்து அவருடைய பூர்வீகச் சொத்தா அல்லது அவருடைய சுய சம்பாத்தியச் சொத்தா? (2) அச் சொத்து மாமியார் பெயரில் 'பெயர் இரவலாக' வைக்கப்பட்டிருக்கிறதா அல்லது சொத்தே மாமியாருடையதா? (3) விதவை மருமகளுக்குப் பிறந்திருக்கும் 'குழந்தை' ஆணா, பெண்ணா? (இவ்விஷயங்களை மறுபடியும் எழுதினால் கேள்வி நம்பரைக் கண்டு எழுதவும்.)

## இரண்டாம் தாரம் மணம் செய்து கொள்ளலாமா?

25. கேள்வி: (சங்கரநாராயணன்-சாத்தான்குளம்.) சொத்துக்கள் உள்ள ஒரு இந்துவுக்கு முதல் தாரத்தின் மூலம் ஒரு ஆணும் ஒரு பெண்ணும் இருக்கிறார்கள். முதல் தாரம் இறந்த பிறகு அவர் இரண்டாந்தாரம் கலியாணம் செய்து கொண்டார். தகப்பனார் கலியாணம் செய்து கொள்ளலாமா? தற்போதுள்ள சட்டப்படி தகப்பனார் இரண்டாந்தார மனைவிக்குச் சொத்தில் பங்கு எழுதி வைத்தால் செல்லுமா? தகப்பனார் இறந்த பிறகு சொத்தில் யாருக்கு எல்லாம் பங்கு உண்டு? இரண்டாம் தாரமனைவிக்கு ஒரு பிள்ளை பிறந்தால், மூத்த தார மகனுக்கும் அவளுக்கும் எப்படிப் பங்கு உண்டு?

பதில்: முதல் தாரம் இறந்த பிறகு தகப்பனார் இரண்டாம் தாரம் கலியாணம் செய்து கொள்ளச் சட்டப்படி தடை ஒன்றுமில்லை. சென்னைப் பலதாரத்தடைச் சட்டப்படி, ஒரு மனைவி உயிருடனிருக்கும் போது தான் இரண்டாவது கலியாணம் செய்து கொள்ளக் கூடாது. சொத்துக்கள் தகப்பனாருடைய சுயசம்பாத்திய சொத்துக்களாக இருந்தால்தான் அதை அவர் இரணடாம் தார மனைவிக்கு எழுதி வைக்கலாம். தகப்பனார் இறந்தால் முதல் மனைவியின் ஆண் மகனுக்குப் பாதியும் இரண்டாம் மனைவிக்குப் பாதியுமாக வார்சு பாத்தியம் ஏற்படும். ஆனால் இரண்டாம் மனைவி அப்பாகத்தைத் தன் ஆயுள் வரை அனுபவித்த பிறகு, அதுவும் முதல் மனைவியின் ஆண்மகனையே சேரும். இரண்டாம் மனைவிக்கு ஒரு பிள்ளை பிறந்தால், தகப்பன் இறந்த பிறகு சொத்துக்களை மூன்று பாகமாகச் செய்து முதல் மனைவியின் ஆண் மகன் ஒரு பாகமும், இரண்டாம் மனைவியின் ஆண் மகனுக்கு ஒரு பாகமும், இரண்டாம் மனைவிக்கு ஒரு பாகமும் உண்டு. ஆனால் இரண்டாம் மனைவிக்கு அனுபோக பாத்தியம்தான். அவள் இறந்த பிறகு அப்பங்கு இரண்டு ஆண்மக்களையும் சேரும்.

(21-ம் பக்கம் தொடர்ச்சி)

பிரதிவாதி சின்னச்சாமியானவர் வாதிகளுக்கு நஷ்டஈடு கொடுக்கக் கடமைப்பட்டவரா அல்லவா? உங்கள் தீர்ப்பு என்ன?

ஒருவருடைய தவறுதலாலோ அசட்டையாலோ (Negligence) பிறருக்கு நஷ்டம் ஏற்பட்டால்தான், அவர் நஷ்டம் அடைந்தவருக்கு நஷ்டஈடு செய்து கொடுக்கவேண்டுமென்பதுதான் சட்டம் என்பதையும் கவனித்து உங்கள் தீர்ப்பை அளியுங்கள்!

* * *

ஒருவருடைய தவறுதலாலோ அல்லது அசட்டையாலோ மற்றொருவருக்கு நஷ்டம் ஏற்பட்டால், தவறு செய்தவர் அல்லது அசட்டையாக இருந்தவர் அவருக்கு நஷ்டஈடு கொடுக்கவேண்டுமென்பதுதான் சட்டம். இவ்வழக்கில், தம்முடைய கட்டடத்தில் தீ பிடிக்கும்படி மில்காரர் யாதொரு தவறும் செய்யவில்லை. அசட்டையாகவும் இருக்கவில்லை. தற்செயலாகவும், எவரும் எதிர்பார்க்காத விதமாகவும் எலெக்ட்ரிக் கம்பிகளிலிருந்து தீ ஆரம்பமாயிற்று.

அத்துடன் இருந்திருந்தால் அதனால் மில்காரருக்கு எவ்வித பொறுப்பும் இல்லை. ஏனென்றால் நெருப்பு ஏற்பட்டது அவருடைய தவறுதலாலோ, அசட்டையாலோ அல்ல. ஆனால் தற்செயலாக ஆரம்பித்த தீயானது தெற்கே உள்ள சாக்குகளில் பிடித்துக் கொள்ளாமலும், அதிலிருந்து வாதிகளின் வீட்டுக்குத் தாவாமலிருப்பதைத் தடுக்கவும் மில்காரர் சின்னச்சாமி யாதொரு முயற்சியும் செய்யாமல் அசட்டையாக இருந்துவிட்டார். அவர் தம்முடைய மில் கட்டடத்தில் ஏற்பட்ட நெருப்பையே அணைக்க முயற்சி செய்யாமலிருக்கும்போது அடுத்த வீட்டுக்கு நெருப்பு பரவாமல் இருப்பதைப்பற்றி என்ன கவலை கொள்ளப் போகின்றார்? நெருப்புப் பிடித்துக்கொண்டவுடன் அதை அணைக்க உடனே நெருப்பணைக்கும் இன்ஜின்களைத் தருவிக்கக்கூட அவர் ஒன்றும் முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. அசட்டையாக இருந்துவிட்டார். வாதிகளின் வீட்டில் பரவிய தீயானது, தற்செயலாக மின்சாரக் கம்பிகளில் ஏற்பட்ட தீ அன்று. பிறகு, சாக்கு வழியாகப் பரவிய தீதான் வாதிகளின் வீட்டை எரித்தது. இத்தீ ஏற்பட்டது சின்னச்சாமியின் அசட்டையால்தான். இத்தீயால் வாதிகளுக்கு ஏற்பட்ட நஷ்டத்தைச் சின்னச்சாமிதான் வாதிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர். (68 லா வீக்லி 99-ல் உள்ள சென்னை ஹைகோர்ட்டுத் தீர்ப்பைத் தழுவி இவ்விளக்கம் செய்யப்பட்டிருக்கிறது.)

# உங்கள் தீர்ப்பு என்ன



187738

சுந்தரம்மாளின் வீட்டுக்கு அடுத்த வடக்கே, ஒட்டினாற்போல் இருந்தது சின்னச்சாமியின் எண்ணெய் மில். ஒரு நாள் காலை, பொழுது விடியும் நேரம், சின்னச்சாமியின் எண்ணெய் மில்லில் தீப்பிடித்தது. அத்தீயானது பரவி, தெற்கேயுள்ள சுந்தரம்மாளுடைய வீட்டின் ஒரு பாகம் எரிந்துபோயிற்று. சுந்தரம்மாள் அப்பொழுது வீட்டிலில்லை. இரண்டொரு நாட்கள் முன்பே அவள் அதே டவுனில் வேறு ஒரு தெருவில் நடந்த கலியாணத்திற்காகப் போய்விட்டாள். ஆனால் அவ்வீட்டில் ஒரு பாகத்தில் ஒருவர் குடியிருந்தார். அவர் காலையில் பல் துலக்கிக்கொண்டிருக்கும் போது நெருப்பு வாசனையை உணர்ந்ததுடன், பக்கத்திலுள்ள எண்ணெய் மில்லில் நெருப்பையும், தாம் குடியிருக்கும் வீட்டில், சொந்தக்காரர் பூட்டிவைத்திருக்கும் அறையிலிருந்து புகை வருவதையும் கவனித்தார். உடனே வீட்டின் சொந்தக்காரருக்குத் தகவல் அனுப்பியதுடன், அவரே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இவ்விஷயத்தை அறிவித்தார். உடனே தீ அணைக்கும் இன்ஜின்கள் வந்து நெருப்பை அணைத்தன. வீட்டின் சொந்தக்காரரும் வந்தார். ஆனால் அதற்குள் சுந்தரம்மாளின் வீட்டின் ஒரு பாகம் எரிந்துபோய்விட்டது. ஜன்னல்களும், உத்திரங்களும், ரீப்பாகளும் எரிந்துபோனதுடன் அங்கே இருந்த சில சாமான்களும் எரிந்துபோய்விட்டன. இதனால் சுந்தரம்மாளுக்கு ரூ. 3000க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது. இந்த நஷ்டத் தொகையை அடுத்த வீட்டு மில்காரர் சின்னச்சாமிதான் தமக்குக் கொடுக்கவேண்டுமென்று அவளும் வீட்டிற்குப் பாத்தியமுள்ள மற்றொருவரும் சேர்ந்து, சின்னச்சாமிமீது தாவா செய்தார்கள்.

பிரதிவாதி சின்னச்சாமி கட்சியாடினார். வாதியின் வீட்டில்தான் முதலில் தீ ஏற்பட்டதென்றும் அத்தீதான் வடக்கே பரவி தம்முடைய மில் கட்டடத்தையும் அதிலிருந்த சாமான்களையும் எரித்து விட்டதென்றும், தமக்குத்தான் அதனால் ரூ. 15,000 நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்றும் கட்சியாடினார்.

இக்கட்சிகளையும் இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட பல சாட்சிகளின் வாக்குமூலங்களையும் நீங்கள் கவனிக்கவேண்டியதில்லை. உண்மையில் என்ன நடந்ததென்பதைப்பற்றி இவ்வழக்கை முதலில் விசாரித்த நீதிபதியும் சரி அப்பீல்களை விசாரித்த உயர்நீதிபதி அவர்களும் சரி ஒரே முடிவுக்குத்தான் வந்தனர்.

பிரதிவாதி சின்னச்சாமியின் மில்லில் போடப்பட்டுள்ள மின்சாரக் கம்பிகள் ஒன்றுக்கொன்று உரைந்து கொண்டதால், தீ ஏற்பட்டது. தீ ஏற்பட்டது தற்செயலாகவே சின்னச்சாமி எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்திருந்தாலும் இதை எதிர்பார்த்திருக்க முடியாது. இவ்விதம் தற்செயலாக ஏற்பட்ட நெருப்புத்தான் முதலில் மில்லில் இருந்த சாக்குகளில் பிடித்துக்கொண்டது. மில்காரருடைய சாக்குகள் வாதிகளின் வீட்டை ஒட்டினாற்போலுள்ள இடங்களிலும் வைக்கப்பட்டிருந்தமையால் அச்சாக்குகளிலும் பிடித்துக்கொண்ட நெருப்பானது வாதிகளின் ஜன்னலுக்குத் தாவி அப்படியே வாதிகளின் வீட்டுக்குப் பரவியது. மில்காரர் இத்தனைக்கும் ஒன்றும் செய்யவில்லை. தம்முடைய மில்லில் பிடித்துக்கொண்ட நெருப்பையே அவர் அணைக்க எவ்வித முயற்சியும் செய்யவில்லை; வாதிகளின் வீட்டுக்கு அத் தீ பரவுவதையும் தடுக்க அவர் யாதொரு முயற்சியும் எடுக்கவில்லை. அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் தீ அணைக்கும் இன்ஜின்களைத் தருவிக்கக்கூட ஏற்பாடு செய்யவில்லை. சும்மா இருந்துவிட்டார்.

(20-ம் பக்கம் பார்க்க.)

# கூட்டுறவுச் சட்டமும் விதிகளும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008

K. ஸ்ரீநிவாஸன், M. A.
(தஞ்சை ஸூட் கூட்டுறவுப் பயிற்சிக் கழக விரிவுரையாளர்.)

[1932-ஆம் வருடத்திய கூட்டுறவுச் சட்டமும் அவை சம்பந்தமான விதிகளும் "வக்கீல்" 1954-மே இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்படுகின்றன.]

**ஜில்லா போர்டு, சர்க்கார் அல்லது ரயில்வே சிப்பந்தியின் சம்பளத்தை அட்டாச்சு செய்யலாமா? முறை என்ன ?**

சிப்பந்தியின் சம்பளத்தில் முதல் நூறு ரூபாயும் அவருடைய பிராவிடெண்டு டெபாசிட்டு, பென்ஷன் முதலியவைகளையும் ஜப்தி செய்யக்கூடாது. ரூ. நூறுக்கு மேற்பட்ட சம்பளத்தில் முதல் ரூ. 100 போக பாக்கியில் பாதியைத்தான் அட்டாச்சு செய்யலாம். டிக்ரி பாக்கிதார் வேலை செய்யும் ஆபீசின் அதிகாரிக்கும், அவர் மூலம் பாக்கிதாருக்கும் நோட்டீஸ் அனுப்பி சம்பளத்தை அட்டாச்சு செய்யவேண்டும். சம்பளம் பட்டுவாடா செய்யும் அதிகாரி, கோர்ட்டு உத்திரவை நிறைவேற்றலுக்குத் தனியாக ஒரு அதிகக் கட்டணம் கோரப்படும்.

**பாக்கிதாரருக்கு வேண்டிய புரோ நோட்டு, டிக்ரிகளை ஜப்தி செய்யும் முறை.**

புரோநோட்டு ஜப்தி செய்யப்பட்டால் ரிஜிஸ்திரார் ஜப்தி செய்யப்பட்ட தகவல் பற்றி புரோநோட்டு எழுதிக்கொடுத்தவருக்கு நோட்டீஸ் அனுப்பவேண்டும். டிக்ரியாக இருந்தால் டிக்ரி - பாக்கிதார், டிக்ரியை நிறைவேற்றவேண்டிய கோர்ட்டு இருவருக்கும் நோட்டீஸ் அனுப்பவேண்டும்.

**ஜங்கம சொத்து ஏலம் நடத்தப்படும் முறை.**

ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களின் ஜாபிதா (நெ. 4) சேல் ஆபீசரால் டிக்ரி பாக்கிதாரருக்குக் கொடுக்கப்படும். பின்பு அவர் ஷை சொத்துக்களை ஏலம்விடும் தேதியை நிர்ணயித்து, ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களின் பந்தோபஸ்துக்கு ஏற்பாடு செய்வார். சாதாரணமாக ஜப்தி செய்யப்பட்ட 15 நாட்களுக்குப்பின் ஏலம் நடைபெறும். ஜப்தி செய்யப்பட்ட பொருள் சீக்கிரம் அழியக்கூடியதாயிருந்தால் அதை மேற்சொன்ன 15 நாட்களுக்கு முன்னதாகவே ஏலம்விட சேல் ஆபீசர் ஏற்பாடு செய்யலாம்.

ஏல தினத்தன்றும் அதன் முதல்நாளிலும் ஏல விளம்பரம் தண்டோரா மூலம் ஏலஸ்தலத்தில் பிரசுரிக்கப்படும். ஏலம் சாதாரணமாக உயர்ந்த கோரிக்கைதாரருக்கு உறுதி செய்யப்படும். என்றாலும் சேல் - ஆபீசர் தகுந்த காரணங்களுக்காக அவ்விதம் செய்ய மறுக்கலாம். தவிர, அவர் அவசியம்போல் ஏலத்தை ஒரு வாரத்திற்கு அதிகப்படாமல் (புது நோட்டீஸ் இல்லாமல்) ஒத்தி வைக்கலாம்.

ஏலம் உறுதி செய்யப்பட்டவுடன் ஏலமெடுத்தவர் பூரா ஏலத் தொகையையும் கட்டி சாமான்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

ஜப்தியான சொத்தில் பாத்தியம் கொண்டாடும் எவரும் ஜப்தியை ஆட்சேபித்து ஏலத் தேதிக்கு முன் ரூ. 1-8-0 லேபிள் ஒட்டி ஆட்சேபனை மனு செய்துகொள்ளலாம். மனு அங்கீகரிக்கப்பட்டால் சொத்து ஏலத்திலிருந்து நீக்கப்படும். மனு தள்ளப்பட்டால் மனுதார் அதன்மீது ஆறுமாதங்களுக்குள் அப்பீல் செய்துகொள்ளலாம்?

**ஸ்தாவர சொத்துக்களை அட்டாச்சு செய்து ஏலம்போடும் முறை. டிமாண்டு (Demand).**

முதலில் டிக்ரி பாக்கிதாரருக்கு தமது பாக்கியை உடனே கொடுக்கும்படிக்கும் தவறினல் ஷெட்யூலில் குறிப்பிட்ட ஸ்தாவர சொத்துக்கள் ஏலம் போடப்படும் என்றும் டிமாண்ட் நோட்டீஸ் (நெ. 6) கொடுக்கப்படும். ஆனல், டிக்ரிபாக்கிதார் சொத்தை பராதீனம் செய்துவிடுவார் என்று கருதினல் அந்த டிமாண்டை அட்டாச்சு உத்திரவுடன் சேர்த்து ஒரே சமயத்தில் சர்வ் செய்ய கோர்ட்டாருக்கு அதிகாரம் உண்டு.

(தொடரும்)